FOUR GREAT HEROES OF CHARITY

BY

M. RAJAMANIKKAM
TAMIL PANDIT T H S SCHOOL
WASHERMANPET

K. PALANIANDI PILLAI & CO.,
PUBLISHERS,
TRIPLICANE, MADRAS

நாற்பெரு வள்ளல்கள்

(குறிப்புரையுடன்)

மா. இராஜமாணிக்கம்,
தமிழ்ப்புலவர், சர். தியாகராய கலாசாலை,
வண்ணாரப்பேட்டை, சென்னை.

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,
திருவல்லிக்கேணி, சென்னை.

[பதிப்புரிமை] 1931 [விலை அணா 7

Approved by the Text-Book Committee

Vide Fort St George Gazette Page 615

Dated 11th November 1930

முதற் பதிப்பின் முன்னுரை

இச் சிறு நூல், தன்னலங் கருதாத் தனிப் பெரு வள்ளல்களாய்த் தமிழ் நாட்டில் பெருமை யுற்று விளங்கிய 'பாரி, ஆய், அதியன், குமணன்' என்போரது வரலாற்றைக் கூறுவது. இஃது, புற நானூற்றைப் பெரும்பான்மை தழுவியும், அகநானூறு, நற்றிணை முதலிய பிற இலக்கியங்களைச் சிறுபான்மை தழுவியும் ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளது. இதில், பண்டைத் தமிழ் வேந்தர், வள்ளல்கள், குடிகள், பரிசிலர், புலவர் என்ற இவர்களுடைய நாகரிக வாழ்க்கையும், குணச் சிறப்புக்களும், மலைப்பகுதிகளின் தோற்றம், இயற்கை வனப்பு முதலியனவும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இந் நூல், இறுதியில் அரும்பதங்கட்குப் பொருள் பெற்றுள்ளது. மாணவ வுலகம் கற்றுப் பயன் அடையவேண்டுமென்ற கருத்தோடு சீரிய செந்தமிழ் நடையில் இஃது எழுதப்பட்டதாகும்.

நககிரகுரகம்,
வண்ணை

மா. இராஜமாணிக்கம்

[இந் நூலைப்பற்றித் தமிழ்ப் பேராசிரியர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் இந் நூலாசிரியருக்கு எழுதிய நிருபம்]

'பழனி விலாசம்'
தண்டையார்பேட்டை,
15—2—30

அன்புள்ள நண்பரே,

தங்கள் 'நாற்பெரு வள்ளல்கள்' என்னும் நூலினைப் படித்துப் பார்த்தேன். தமிழகத்திலே வரையா வள்ளன்மையுடன் விளங்கி, இணையின்றுயர்ந்த புகழால் என்றும் பொன்றாது நிற்கும் பாரி, ஆய், அதியமான்—அஞ்சி, குமணன் என்போரின் வரலாறுகளைச் சங்க இலக்கியங்களின் ஆராய்ச்சி கொண்டு இனிதுரைக்கும் இந் நூல் உயர் வகுப்பு மாணவர்களால் விரும்பிக் கற்றற்குரியதாகும். நீங்கள் இதுபோலும் பல ஆராய்ச்சி நூல்கள் எழுதுமாறு செந்தமிழ்த் தெய்வத்தின் திருவருளைச் சிந்திக்கின்றேன்.

ந. மு. வேங்கடசாமி நாட்டார்

இரண்டாம் பதிப்பின் நூன்முகம்

'நாற்பெரு வள்ளல்கள்' என்ற பெயரோடு வெளிவரும் இச் சிறு நூல் ஆன்றோர்களால் ஆதரிக்கப்பட்டமையின், இதுபோது இரண்டாம் பதிப்பாக வெளிவந்துளது. இத்தகைய சங்க நூல்களால் தழுவப்பட்ட சிறு நூல்களை எழுதுமாறு என்னை இத் துறையில் ஊக்கிய தமிழ் அறிஞர்கட்கும், என்னகத்தே இருந்து இன்பமளிக்கும் திருவருளுக்கும், இச் சிறு நூலைப் படித்து மதிப்புரை தந்த தனித் தமிழ்ப் பேராசிரியர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கட்கும், எனக்குத் தமிழறிவை யுண்டாக்கிய என் ஆசிரியர் கரந்தைத் தமிழ்ச் சங்கப் புலவர் ஆர். வேங்கடாசலம் பிள்ளை யவர்கட்கும், இந் நூலை எழுத எனக்குப் பேருதவியா யிருந்த என் ஆசிரியர் கோ. இராமலிங்கத் தம்பிரான் அவர்கட்கும், இது போன்ற நூல்கள் பல வெளியிட்டு மாணவர்க்குத் தமிழ்ச் சுவையூட்டும் கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனியாருக்கும் என்து வணக்கம் உரியதாக,

[illegible] }
[illegible] } மா. இராஜமாணிக்கம்.

பொருளடக்கம்

		பக்கம்
1	வேள் — பாரி	1
2	வேள் — ஆய்	25
3.	அதியமான் நெடுமான் அஞ்சி	41
4	குமணன்	73
5.	குறிப்புரை	101

நாற்பெருவள்ளல்கள்

I. வேள்—பாரி

1. தமிழ்நாடும் வேளிரும்

அமிழ்தின் சிறந்த தமிழ்மொழியினை வளர்த்த வர்கள் சேர சோழ பாண்டியன் என்னும் முடியுடை வேந்தரன்றி, 'வேளிர்' என்ற ஒரு வகுப்பாரும் இருந்த னர். வேளிரைத் தென்னாட்டு மூவேந்தர் பெரிதும் ஆதரித்தனர். வேளிரது மகளிரையும் மூவேந்தர் மணம் புரிந்து கொண்டனர்.

இவ்வாறு, ஆட்சி புரிந்த வேளிர், வரையாது வழங்கும் வள்ளன்மையாலும், அரசால் பெற்ற வரிசைகளாலும், தண்ணளியாலும், வலிமையாலும், பண்டுதொட்டே நம் தமிழ்நாட்டில் பெரும் புகழ் பெற்று விளங்கினர். இவர்களைப் பாடாத புலவர்கள் இலர் என்றால், இவர் தம் பெருமையைப் பகரவும் எளிதோ? இவ் வேளிரும் இவர் தம் மக்களும் தமிழ்ப்புலமை பெற்று விளங்கினர். இத்தகைச்

சிறப்புடை வேளிர்களில் மிகச் சிறந்தோராகக் கருதப்படுபவர் எழுவர் அவர்கள், 'பாரி, ஓரி, மலையன், எழினி, பேகன், ஆய், நள்ளி' என

இவ்வெழுவரில் ஒருவனும், புலவர்க்கு வெய்யனாய் விளங்கியவனும், பாவலராலும் போற்றப்பட்டவனுமான 'பாரிவேள்' என்பவனது வரலாற்றை கூறுவோம் இவ் வேளிருடைய வரலாறுகள் 'இதுமுதல் இதுவரையில்' என்பதாக வரையறுத்துக் கூறத்தக்க ஆதாரங்கள் இல்லாமையால், புலவரால் பாடப்பட்ட செய்யுட்களிலிருந்தே ஒருவாறு இவர்தம் வரலாறுகளை அறியவேண்டும்.

2 பறம்பு நாடு

'புரிசைப் புறத்தினிற் சேரனுஞ் சோழனும் போர்புரிய
இரியச் சயங்கொண்ட போழ்தினிற் பாரினி னீங்கிவினைப்
பரிசகு நல்ல கவிபாடி னெவ்வரும் பாகமென்றே
வரிசைத் தமிழ்புனை பாரியும் பாண்டியன் மண்டலமே''

—பாண்டி. மண்டலச் சதகம்.

இச் செய்யுளால் வேள்-பாரி பாண்டியநாட்டைச் சேர்ந்தவன் என்பது அறியப்படுகிறது இவனுக்குரிமையாயிருந்த நாடு 'பறம்புநாடு' எனப்படும் ஆதலின், பறம்புநாடு பாண்டியநாட்டைச் சேர்ந்த நாடாகும் 'பறம்பு' என்னும் அழகியமலை அந் நாட

டில் உள்ளது. அம்மலை இக்காலத்தில் 'பிரான்மலை' என வழங்குகின்றது. பாரியின் பறம்புநாடு வளத்தில் ...ப்பட்டிருந்தது, இனிய பூஞ்சுனைகளையும் பூஞ் சோலைகளையும் மிகுதியாகக் கொண்டது. இயற்கை யமைப்பால் அப் பறம்புநாடு பல புலவர்கட்கும் பொழுது போக்கை உண்டுபண்ணி வந்தது. இன்னணம் பல வளங்களாலும் சிறந்த அப் பறம்புநாடு தன்னகத்தே முந்நூறு ஊர்களைக் கொண்டதாகும். அந் நாட்டிற்கு நடுநாயகமாக இருந்த பறம்புமலை மூங்கில்களும் பலா மரங்களும் இனிய பூஞ்சுனைகளும் மிகுதியாக அம்மலையில் உண்டு.

பறம்பு மலைமீது ஒரு பேரரண் உண்டு. அவ்வரணில் வேள் - பாரி என்பவன் தன் குடிக ளோடு வாழ்ந்து வந்தான். இயற்கையமைப்பாலும் செயற்கையமைப்பாலும் அவ்வரண் பார்ப்போர் உள் ளத்தைக் கவரும் கட்டழகு வாய்ந்தது. குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற ஐந்திணை களின் வினையும் பொருள்களையும் அவ்வரணுள் காண லாம். அதனை நவமணித்திரள் நிறைந்த கற்பெட்டி யென்னலாம். அவ்வரண் அரசனது அழகிய அரண் மனையையும், ஆயுத சாலைகளையும், பொக்கிஷ சாலைகளை யும், குடிகளின் இல்லங்களையும், சிங்கார மண்டபங் களையும், பலாமரத் தோப்புகளையும் ஏனை அங்கங்களைக் கொண்டது. என்றும் வற்றாத, இனிமை பய

பசுமையான குளிர்ந்த சோலையுடைய பூஞ்சோலையொன்று அவ்வூருள் இருந்தது.

"கடும்பரிப் புரவிக் கைவண் பாரி
தீம்பெரும் பைஞ்சுனைப் பூத்த
தேங்கமழ் புதுமலர் நாறும் இவள் நுதலே"

—அகநானூறு

அவ்வூரும் அரிய காவலைக் கொண்டது,

"   ,   ஒளிறிழைக் குறுமகள்
பேரிசை உருமொடு மாரி முற்றிய
பல்குடைக் கள்ளின் வண்மகிழ்ப் பாரி
பலவுறு குன்றம் போலப்
பெருங்கவின் எய்திய அருங்காப் பினளே"

—நற்றிணை

3. வேள்—பாரி

இவன் கடையெழுவள்ளல்களில் ஒருவன், ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்டவன். இவன் நல்லொழுக்கம் வாய்ந்தவன், குடிகளை அன்போடும் அருளோடும் காத்து வந்தவன், இரப்போரைக் காணச் சகியான், யார் எதை வேண்டினாலும் 'பெறுக' என்று அன்போடு கூறி அவர் வேண்டுவதை அளிப்பவன். இவனைப் பாடாத புலவர் இல்லை, சுந்தரமூர்த்தி நாயனாரும் தமது தேவாரத்தில், "கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினும் கொடுப்

பாரியை" என்று கூறியுள்ளார். கொடையிற் சிறந்து விளங்கிய வள்ளல்கள் பலர் இருந்தும், அப் பெரியார் பாரியை உதாரணமாகக் காட்டியதேன்? அவன் அக் காலத்து வள்ளல்கள் அனைவரினும் மேம்பட்டு விளங்கியதாலன்றோ?

"புலங்கந் தாக இரவலர் செலினே
வரைபுரை களிற்றொடு நன்கலன் ஈயும்
உரைசால் வண்புகழ்ப் பாரி"

—அகநானூறு

என்று நல்லிசைப் புலமை வாய்ந்த மெல்லியலான ஔவையாரால் புகழ்ந்து பாடப்பெற்றவன் இப் பாரி வேள்.

இவன், பைந்தமிழ்ப் பாவலர் போற்றும் 'கபிலர்' என்னும் புலவர் பெருமானின் ஆருயிர் நண்பன் ஆதலால், இவன் ஒழுக்கத்திலும் குணத்திலும் மேம்பட்டவன் என்பது வெள்ளிடைமலை. இப் பாரி, வில்லும் வேலும் கழலும் கண்ணியும் தாரும் ஆரமும் தேரும் வாளும் உடைய குறுநில மன்னவர். இவன் நாட்டையும் பொருளையும் படையையும் அதிகம் பெற்றிலனாயினும், இவனது வள்ளன்மை மூவேந்தர் வள்ளன்மையினும் தலைமையுற்று விளங்கியது.

இவனது மனைவி கணவன் கருத்தறிந்து இசைந்த காரிகை.

பாரிவேளுக்குப் பெண்மக்கள் இருவர் இருந்தனர். அவர்கள் கல்வியில் கலைமகளையும் அழகில் அலைமகளையும் பொறுமையில் மலைமகளையும் ஒத்திருந்தனர். அவர்கள் தமது இளமையிலேயே கபிலர் பெருமானிடங் கல்வி கற்று, கவிபாடும் ஆற்றலையும் பெற்றுச் செந்தமிழ்ச் செல்வியராய் விளங்கினர்.

பாரி, மனமொத்த தனது இல்லாளுடனும், பெண்மணிகளுடனும், உயிர் நண்பரான கபிலருடனும் காலங்கழித்து வந்தான்.

4 முல்லைக்குத் தேர் நல்கியது

உம்பரார் வினைய ஐயனாகிய பாரிவேள் தனது பொற்றேர் ஊர்ந்து வேட்டைக்குப் புறப்பட்டான். பறம்புமலையை அடுத்த பெரிய காட்டில் பலவகைப்பட்ட கொடிய விலங்குகள் அடிக்கடி மலைநாட்டார்க்குத் துன்புறுத்துவதோடு மலைச்சாரலிலுள்ள வாழும் மக்கள் வளர்த்து வந்த ஆடு மாடுகளை அடிக்கடி, புலி முதலிய விலங்கினங்கள் கவர்ந்துகொண்டு போவதுண்டு. தன் நாட்டுக் குடிகளுக்கேற்படும் இன்ப துன்பங்களுக்கு அரசன் உரிமையுடையவன் அன்றோ? அதனால், தன் குடிகளுடைய துயரைப் போக்கக் கருதியே பாரிவேந்தன் வில்லும் வாளும் ஏந்தி, விலங்குகளை வேட்டையாடச் சென்றான்.

வள்ளல் பலவகை மிருகங்களை அம்பெய்து கொன்று, தன்மனம் மகிழுமாறு அன்று வேட்டையாடினன் ஆடியபின்னர், அவன் தன் தேர்மீது இவர்ந்து வந்துகொண்டிருந்தான் அவ்வாறு அவன் வருகையில், தன் நாட்டு வளப்பத்தைக் கண்டு மகிழ்பவன் போது இருபுறங்களிலும் ஊன்றிய பார்வையுடனிருந்தான் அவனோ ஓர் இடத்தில் முல்லைக் கொடியொன்று படர்வதற்கு ஏற்ற கொழு கொம்பு இல்லாது, வெயிலாலும் காற்றாலும் துன்புறுவதைக் கண்டான். உடனே அவ்வள்ளல் அம் முல்லையருகில் தன் தேரை நிறுத்தினான், கீழிறங்கினான், முல்லை படும் துன்பத்தைக் கண்டான், அவன் துயரமும் மயக்கமுங் கொண்டது, கண்களில் நீர்த்துளிகள் துளித்தன பிறர் துயரம் காணச் சகியாத அவன் "அந்தோ! இக் கொடியை இதுவரை யாரும் கவனிக்கவில்லையோ! செடி கொடி முதலியவைகட்கும் உயிர் உண்டென்று கூறுகின்றனரே! இக்கொடி, படர்தற்கேற்ற கொழுகொம்பு இல்லாது இவ்வாறு வாடுகின்றதே, என்செய்வேன்?" என்று இரக்கமுற்றவனாய்க் கொம்பொன்றைத் தேடி அங்கும் இங்கும் அலைந்தான் கொடி படர்தற்கேற்றதாக உள்ள கொம்பு கிடைக்கப் பெறாது மனம் வருந்தினான் "யான் என் செய்வல்! ஏற்ற கொம்பு ஒன்றும் கிடைக்கவில்லையே இதன் வாட்டத்தைக் கண்டும், இதற்கு உதவி செய்யாது யான் செல்லுதல் அழகோ? அவ்வாறு யான் சென்

நானும், என் மனச்சாட்சி என்னைச் சுட்டெரிக்குமே. பிறர் துயரங்களைச் சகியாத தன்மை வாய்ந்த யான், இச்சமயத்தில் இம் முல்லைக் கொடிக்கு ஏற்ற உதவி செய்ய வகையறியாது தயங்குகின்றேனே" என்று கூறி வருந்தலுற்றான். பின்னர் ஏதோ யோசித்தவன்போல், அவன் களிப்புற்று, "ஆ! மறந்தேன், எனது பொற்றேரை இம் முல்லைக்கொடி படர்வதற்கு ஆதாரமாக வைத்துவிட்டுச் செல்வேன், இதுவே சரியானது" என்று கூறிக்கொண்டான். உடனே அவன் தன் பொற்றேரைச் சிறிதும் முன் பின் யோசியாது, காற்றால் அலைப்புண்ட அம்முல்லைக் கொடிக் கருகில் நெருங்க வைத்தான். ஆடிக் கொண்டிருந்த கொடி இனிதாய்ப் படருமாறு, தன் தேர்மீது அதனை எடுத்து விடுத்தான்.

தேரை முல்லைக்கு நல்கியதால் அவன் அவ் விடத்தினின்றும் புறப்பட்டு, வெயிலால் மண்டை வெடிக்கவும், கால்கள் கொப்புளிக்கவும் நடந்து சென்று தன் அரண்மனையை அடைந்தான். அவ் வள்ளல் பெருமான் செய்த இவ்வரிய செயல் பல நூல்களில் பல அறிஞரால் பாராட்டப்படுகின்றது.

"சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பறம்பிற் கோமான் பாரி"—

—சிறுபாணாற்றுப்படை.

"பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி"— புறநானூறு

"முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்"
—புறப்பொருள்வெண்பாமாலை

5. கபிலர் புகழ்மொழிகள்

கபிலர் பாரிவேளது அருங்குணங்களைக் கண்டு அவ்வப்போது புகழ்பவர். அவர் ஒருகால் பாரியினது வள்ளன்மையைப் புகழ்பவராய், "நல்லனவென்றும் தீயனவென்றும் சொல்லப்படுவன குடும மலர்கள், அவையிரண்டினும் வேறான எருக்கம்பூக்களாயினும் ஒருவனுடையனவற்றைத் தெய்வங்கள் விரும்பேமென்று சொல்லாவாம். அதுபோல, அறிவில்லாதாரும் அறக்குணமுடையாரும் சென்றாலும் பாரி அவர்கட்குப் பொருள் ஈதலில் தவறான். இவ்வுலகத்தைக் காப்பதற்கு மாரியுண்டு. அங்ஙனம் இருக்கச் செவ்விய புலமைவாய்ந்த அறிவுடையோர் 'பாரி, பாரி' என்று சொல்லி, அவனது பல புகழையும் வாழ்த்தி அவனொருவனையே புகழ்வர். இதனால் மாரியினது வள்ளன்மையை விடப் பாரியது வள்ளன்மை மிகச் சிறந்தென்பது வெளிப்படை. பறம்பு நாட்டில் மிகுந்துள்ள மரங்கள் சந்தன மரங்களே. அவற்றைக் குறத்தியர் எரிக்கின்றனர். சந

கள மரங்களை எரித்தலால் உண்டாகும் புகை அருகேயுள்ள வேங்கை மரத்திற் படியும் இத்தகைய வளம்பொருந்திய பறம்பு நாட்டைப் பாரி, பாடுவார்க்குப் பரிசிலாகக் கொடுத்து விட்டனன். இவனது பாகச் சிறந்தையும் விரிந்த நோக்கத்தையும் நற்குண நற்செயல்களையும் என்னென்பது" என்று பாக்களிற் கூறி வியந்தார்.

அவர் ஒரு நாள் ஒரு விறலியைச் சந்தித்தார். அவள் விரைவாகச் சென்றுகொண்டிருந்தாள். கபிலர் அவளை நோக்கி, "ஒளிபொருந்திய நுதலையுடைய விறலி, உயர்ந்த பறம்புமலையினது காவலனும், அவனுடைய மலையின் சிகரத்தே தாழும் இழிதரும் நீரினும் மிக்க இனிய மென்மையுடையவனுமான பாரி பக்கலிலே நீ பாடிச் செல்வாய், அவ்வாறு செல்வாயாயின், எம் மன்னர் பெருமானிடமிருந்து சிவந்த அணியைப் பெறுதலை, வேறும் பிற பரிசிலையடையலாம்" என்று, பாரியின் வள்ளன்மையைச் சீர்தூக்கிப் புகழ்ந்தார்.

விண்ணவரும் மண்ணவரும் புகழ்ந்துபோற்றும்படி, பாரி தனக்கு உரிமையாயிருந்த முந்நூறு ஊர்களையும் தன்னைப் பாடிவந்த இரவலர்க்கே அளித்து மகிழ்ந்தனன். பிறர் தன்னைப் பெறுவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்த பாரிவேளது புகழ் சொல்லவும் எளிதோ?

6 மூவேந்தர் முற்றுகை

'பொறாமை' என்பது மக்கள் மனத்தே யுண்டாகும் ஒரு தீய எண்ணம். அஃது அறியாமையால் உண்டாவதேயன்றி வேறன்று. கற்றோராயினும் கல்லாராயினும், வறியோராயினும் செல்வராயினும் இத் தீய எண்ணம் இல்லாதார் இலர். பிறரது செல்வப் பெருக்கைக் கண்டு, அவர்மீது பொறாமை கொள்வார் பலர். பிறரது கல்வி யறிவைப் பார்த்துத் தம்மினும் மேம்பட்டவராய் அவர் விளங்குதலைக் காணச் சகியாதார் பலர். பிறர் தமது கொடைத் திறத்தால் எய்தும் புகழைக்கண்டு அவர்மீது பொறாமை கொள்பவர் சிலர். வேந்தராயினும், முற்றும் துறந்த பெரியாராயினும் இப் பொறாமை என்னும் கொடிய பேய் அவரைப் பிடித்துத் தன் ஆட்சியைச் செலுத்துகின்றது.

தமிழ் நாட்டில் ஆண்டுவந்த சேர, சோழ, பாண்டியர் என்னும் முடியுடைத் தமிழ் வேந்தர் மூவரும் இப்பொறாமை என்னும் பேய்க்கு ஒருகால் இலக்காயினர். அவர், பாரிவேளது வள்ளன்மையால் உண்டான குற்றமற்ற புகழைக் கேட்க ஆற்றாராயினர். பாரியின் புகழ், காற்றானது உலகு முழுதும் பரந்து செல்லுதல்போலத் தமிழ் நாடெங்கும் பரந்தது. யாவரும் அவனது கொடைத் திறத்தை வியந்தனர். குறுநில மன்னர் அவனைப் போற்றிப் புகழ்ந்தனர்.

பொறுமை கொண்ட மூவேந்தரும் ஒன்று சேர்ந்து தத்தம் தானையோடு சென்று பாரியைப் போரில் வென்றுவிடக் கருதினர். அவர், கடல் போன்ற தம் சேனைகளோடு பறம்பு நாட்டை அடைந்தனர், பறம்பு மலையை முற்றுகை யிட்டனர். இச் செய்தி பாரிக்கு எட்டியது. வள்ளன்மையிற் சிறந்த பாரிவேள் மூவேந்தர் செய்கைக்கு வெருண்டிலன். அவர்களை எதிர்க்கவில்லை, தனது அரணுக்கு ஏற்ற பாதுகாவலை வைத்துக் கொண்டு அரண்மனையில் இனிதிருந்தான். அரணில் உள்ளோர்க்கு வேண்டிய உணவுப் பொருள்கள் யாவும் அரணுள்ளேயே இருந்தமையால், பாரியும் அவனுடைய குடிகளும் துன்பமின்றி இன்பத்துடன் இருந்தனர்.

சில மாதங்கள் சென்றபின்னர், அரணுள் இருந்தவர்களுக்கு உணவுப்பொருள்கள் குறைந்தன. அவ்வமயம் புலவர் பெருந்தகையார் கபிலர், தாம் வளர்த்துவந்த எண்ணிறந்த கிளிகளை நாடோறும் அரணுக்கு வெளியே விடுவார். அவை விளை நிலங்களுக்குச் சென்று நெற்கதிர்களைக் கொண்டு மீளும். அவற்றை அரிசியாக்கி அரணில் இருப்போர் உண்டு வந்தார்கள்.

இவ்வாறு பல நாட்கள் கழிந்தன. கபிலர் முதலாக அரணுள் அகப்பட்டோர், 'இனி உணவின்றி வருந்த நேரினும் நேரும்' என்று பயந்தனர். மூவேந்

ரும் பாரியை வெல்ல இயலாது மனஞ் சலித்தனர். அவ்வெல்லையில், புலவர் பெருமானாகிய கபிலர் அரண் சுவர்மீது நின்று, முற்றுகையிட்டிருக்கும் மூவேந்தரை நோக்கி, "தமிழ்வேந்தீர், பாரியின் அரணை வீணே முற்றுகையிட்டுச் சலித்தீர். அவனது பறம்பு இரங்கத்தக்கது அன்று. உழவரால் உழுது விளைக்கப்படாத நான்கு விளைபொருளுடையது. அவற்றுள், முதலாவது, சிறிய இலையையுடைய மூங்கில்நெல் விளையும், இரண்டாவது, இனிய சுளையையுடைய பலாவின்பழம் ஊழ்க்கும், மூன்றாவது, கொழுவியகொடியையுடைய வள்ளிக்கிழங்கு தாழ்ந்திருக்கும், நான்காவது, இம் மலையரணில் தேன் மிகுந்துள்ளது. பாரியினது பறம்புமலை அகல நீள உயரத்தால் வானிடத்தை யொக்கும். இம்மலையில் உள்ள சுனைகள் வானத்தினிடத்து உள்ள மீனை யொக்கும். இத்தகைய இயற்கை வளங்களைப்பெற்ற பறம்புமலையில் உள்ள பாரிவேளை நீவிர் வெல்லுதல் எளிதன்று. பெருமையைக் கொண்ட முரசினையுடைய நீவிர் மூவேந்தரும் முற்றுகையிட்டும், மிகுந்த யானைப்படை தேர்ப்படை யுடையீராயினும், உங்கள் முயற்சியால் இம் மலையரணைக் கொள்ளமாட்டீர், நுமது வாள் வலியால் எம்மரசன் தாரான். அதனை யான் நன்கு உணருவேன். யாழை வாசித்து நும் விறலியர் பின்வர ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் அவனிடம் நீவிர் சென்றால், அவன் உங்கட்கு நாட்டையும் மலையையும் பரிசிலாகத் தருவன். அவ

வாறு செய்யாது எத்தனை காலம் முற்றுகையிட்டிருந்தும் பயன் அடையமாட்டீர். மேலும் கூறுவேன் கேளும்; இப்பறம்புநாடு முந்நூறு ஊர்களை யுடையது. இந்தக் குளிர்ந்த நல்ல நாடு, அம் முந்நூறு ஊர்களையும் பரிசிலர் பாடிப் பெற்றனர். அப் பரிசிலர் போன்று நீவிரும் பாடுவீராயின், நமக்குப் பறம்பு மலையன்றிப் பாரியும் நானும் உள்ளோம்," என்று பாரியது வள்ளன்மையையும், மலைநாட்டு வளமையையும் கூறி முடித்தனர்.

அவர் கூறியவை உண்மையென்றே மூவேந்தரும் உணர்ந்தனர். ஆனாலும், பாரியை எவ்வாறேனும் கொல்லவேண்டும் என்று நினைத்துக்கொண்டனர். தங்களிடம் குடிகொண்டிருந்த பொறாமை காரணமாக, ஏதோ ஒரு சூழ்ச்சி செய்து பாரியைக் கொன்றுவிட்டனர். இரவலர்க்கு இனியவனாய் விளங்கிய பாரிவேள் அறிவிழந்த பொறாமையின் வயப்பட்ட மூவேந்தரால் மாண்டதைக் கண்ட அவனது ஆருயிர் மனைவி உயிர்நீத்தாள்.

7. கபிலர் புலம்பல்

பாரிக்கு உயிர் நண்பரான கபிலர், தமது நண்பனும் கொடைவள்ளலுமான பாரிவேள் உயிர் நீத்ததைக் கண்டு பெரிதும் வருந்தினார். அவர் அவனைப் புகழ்ந்து கூறிப் புலம்புபவராய், "அழகிய பாரிவேளது

பறம்புமலையில் உண்டாகும் தேறல் பாரிபோல் இனிமையானது, அவன் இறந்தகால் அது கழிந்தது, பறம்புநாட்டு மகளிர் மிக்க அழகுடையவர்கள், குளிர்ந்த கண்ணையுடையவர்கள், இனிய முறுவலையுடையவர்கள், நெடுவரையேறி முன்பு வேந்தனது கலிமாவை எண்ணுவர், எம் வேந்தன் இறந்துபட்ட இப்போது ஏந்திழைக் குப்பையேறி உமணர் உப்புச் செலுத்தும் சகடத்தை எண்ணுவர் நோவேன், யான், என் வாழ்நாட்கள் கெடுவதாக, புதுவருவாய் இடையறாது வரும் அகன்ற நாடு பகைவர் கொள்ளலாயிற்றே!

சனிமீன் புகைகளோடு கூடிய புகைக்காலும், எல்லாத் திசைகளிலும் புகை தோன்றினும், தென் திசைக்கண்ணே உள்ள 'வெள்ளி' போக்குறினும், பாரிவேளது நாடுவளம் வற்றாது, வயல்களில் விளைவு அதிகமாக உண்டாகும், புதர்கள் அலரும், பெண்கள் வருத்தம் இன்றிக் குழவிகளை யீனுவார்கள், மழை ஒருபோதும் அவனது நாட்டில் பிழைக்காது பாரியது வள்ளன்மையன்றே இவற்றிற்குக் காரணம்! இத்தகைய மன்னன் மாண்டனனே! எட்டாம் பக்கத்துப் பிறைபோலும் வளைந்த கரைகளையும் தெளிந்த நீரையும் உடைய சிறிய குளம் பாதுகாப்பார் இல்லாமையால் உடைந்துவிடும் போலும் கூரிய வேலையும் திரண்ட தோளையும் உடைய பாரிவேளது குளிர்ந்த பறம்புநாடு இனிச் சீர்கெட வேண்டியதே. பாரி

யது பெருமையை யான் என்னென்று இயம்புவேன் நிழல் இல்லாத நெடிய வழியிலின்ற தனிமரம்போல் முரசையுடைய அரசரினும் மிகுந்து இரவலர்க்கு வழங்கும் வண்மையை யுடையன் பாரி, அவனது நாடு முன்பு, மெல்லிய தினையாகிய புதுவருவாயையுடையது, வேங்கை மரங்களையுடையது, கபிரினது அடியும் கல்லும் ஒழியாமல் மிக்க காய்க்கும் பயிர்களை வயலிடங்களில் உடையது வரகு அதிகமாக விளைவதும் அவரைக்கொடிகள் அதிகமாக உள்ளதுமாகிய இந்த நாடு இனிக் கெடும் போலும்" என்று நாட்டையும் பாரியையும் நினைந்து நினைந்து மனம் வருந்திப் புலம்பி யழுதார்

8 கபிலரும் பாரிமகளிரும்

பாரி இறந்ததும் கபிலர் இறந்திருப்பார். ஆனால் பாரி அவரை அங்ஙனம் செய்யவிடாமல் தடுத்ததையாலும் பாரியின் மகளிரிருவரையும் காப்பாற்றுவார் இன்மையாலும், அவர்களை மணஞ்செய்து கொடுக்கும் வரையில் தாம் உயிருடன் இருக்கவேண்டும் என்று அவர் தீர்மானித்துக் கொண்டார் அவர்களுக்குத் தக்க அறிவும் பெருமையும் உடைய கணவரைத் தேட நினைந்து, அவர்களை யழைத்துக் கொண்டு பறம்பு நாட்டை விட்டுப் புறப்பட்டார் புலவர். அவ்வாறு புறப்படும்போது பாரியை நினைந்து புலம்பினார்,

அவனது வள்ளன்மையை நினைந்து வருந்தினார், பறம்பு அரணைத் திரும்பித் திரும்பிப் பார்த்துப் பார்த்துக் கண்ணீர் ஆறாய்ப்பெருக ஆற்றொணாத் துயரால் உள்ளத்தினின்றும் பொங்கி எழுந்த அன்புடைய பாடல்களால், பாரியையும் பறம்பு மலையையும் நாட்டையும் புகழ்ந்துகொண்டே சென்றனர்.

சென்று, ஓர் ஊரில் அன்றிரவு தங்கினர். அவ்விரவு நிலாத் தோன்றியது. அந் நிலவைக் கண்ட பாரி மகளிர், தாம் அதற்கு முந்திய நிலாக்காலத்தில் தமது அரணுள்ளே தந்தையோடு இனிதே வாழ்ந்ததையும் அடுத்த நிலாக் காலத்தில், தம் தந்தையை இழந்து, தங்கள் பறம்பையும் இழந்து தமியராய்ப் பிறர் இருப்பில் தங்க நின்றதையும் எண்ணி எண்ணி வருந்தினர். அவர்கள் மனமுருகி,

"அற்றைத் திங்க ளவ்வெண் ணிலவின்
எந்தையு முடையேம், எங்குன்றும் பிறர்கொளார்,
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார், யாம் எந்தையு மிலமே"

என்று பாடிப் புலம்பினர்.

பின்னர், கபிலர் அம் மகளிரை யழைத்துக் கொண்டு பல நாடுகள் வழிநடந்து, 'இளவிச்சிக்கோ' என்னும் சிற்றரசனிடம் சென்றனர். அவன், 'நன்னன்' என்னும் வேளிர்குலத் தலைவனது வழித்

தோன்றல்; அவன் கபிலரை வரவேற்றான். கபிலர் பாரிமகளிரை அவனுக்குக் காட்டி, "முகிலாலும் உச்சி யறியப்படாத உயர்ந்த மலைக்குத் தலைவ, நின்று குளிர்ந்த மலையினின்று ஓங்கிய பசிய இலையையுடைய பலாமரங்களின் பழத்தைக் கவர்ந்துகொண்ட கடுவன் சிவந்த முகத்தையுடைய தன்னுடைய மந்தியுடனே சேர்ந்துவாழும் அப் பலாமரங்களை மிகவுடையாய் நீ, நினைத்ததினும் கனிந்து நெருப்புப் போலும் தலையையுடைய நெடிய வேலினையும், களங்களைத் தன் தாக்கிக்கொண்டு வெருவரும் குறுங்கண் யானையையும், விளங்கிய மணிகளால் செய்யப்பட்ட வளைந்த ஆபரணங்களையும் உடைய விச்சிக்கோவே! மிக்க விளைதலையுடைய நாட்டையுடையோய்! போரில் பகைவேந்தரது பீடுகளை யடக்குபவனே! இம் மகளிர், கொடி முல்லை தன்னை நாப்படைத்துப் போற்றிப் பாடாதிருந்தும் மணிகள் ஒலிக்கும் நெடிய தேரைக் 'கொள்க' என்று சொல்லிக்கொடுத்த வள்ளன்மை மிகு சிறந்த வேள்-பாரியது பெண்கள். யான் பரிசிலன், அதுவன்றியும், நிலைபெற்ற அந்தணன். நீயோ பகைவரைப் போர் செய்யும் முறையால் பொருது தாழ்விக்கும் மேன்மையுடையோன்; ஆதலால், நினக்கு யான் தருவதைக் கொள்வாயாக," என்றார்.

பாரிமகளிரைத் தன்னை மணஞ்செய்துகொள்ளுமாறு புலவர் வேண்டினார் என்பதை உணர்ந்தான் இளவிச்சிக்கோ. மூவேந்தர்க்கும் பகைவனான பாரியி

னுடைய மகளிரைத் தான் மணந்தால் அதனால் என்ன தீமை விளையுமோ என்று பயந்தான். அவ் வேள் கபிலரை நோக்கி, "புலவீர், இப் பெண் மணிகளை யான் மணந்துகொள்ள இயலாத நிலையில் உள்ளேன்" என்று உறுதியாய்க் கூறினான்.

கபிலர், அம் மகளிரை யழைத்துக்கொண்டு, கொடையாளிகளுள் ஒருவனான 'இருங்கோவேள்' என்பவனை யடைந்தார். அடைந்த புலவர் அவ் வள்ளலை நோக்கி, "மாலையணிந்த யானையை யுடைய இருங்கோவே, நீ, வடபக்கத்து முனிவனுடைய ஓமகுண்டத்தில் தோன்றித் துவராபதியென்னும் படை வீட்டையாண்டு வள்ளன்மையிற் சிறந்த நாற்பத்தொன்பது தலைமுறை தொன்று தொட்டு வந்த வேள்களுள் வைத்துப் போற்றற்குரிய வெற்றிப் போரையுடைய தலைவ! புலிகடிமாலே! வானுறக் கவிக்கப்பட்டுப் பெருங்கடல் சூழாத இப்பூவுலகத்தினர்கள் அணுகுதற்கரிய வலிமையுடைய பொன்னுண்டாகும் பெரிய மலைக்குத் தலைவ! வெற்றிவேலைத் தாங்கிய பகைவர் அஞ்சும் படைக்கும் கேடில்லாத நாட்டிற்கும் உரியவனே! என்னுடன் வந்துள்ள இம் மகளிர் யாரென்று வினவுவாயாயின், இவர் தாம், ஊர்கள் எல்லாவற்றையும் இரப்போர்க்கு வழங்கித் தேரை முல்லைக்கொடிக்கு வழங்கியவனும், தொலையாத நல்ல புகழுடையவனும், பறம்பிற்குத் தலை

வனுமான பாரிவேளது பெண்கள் யான் இவர் பிதாவின் தோழன்; ஆதலால், இவர் என் மகளிர் ஆவர், யான் இவரை நினக்குக் தர, நீ இவரைப் பெற்றுக்கொள்வாயாக," என்று இருங்கோவேளது புகழையும் பாரிவேளது புகழையும் தாம் மேற்கொண்டுள்ள வேலையையும் கூறி, அப் பெண்களை மணந்து கொள்ளுமாறு வேண்டினார்

இருங்கோவேளும், இளவிச்சிக்கோவைப் போல, முடிவேந்தருக்குப் பயந்தவனாய், அம் மகளிரை மணக்க உடன்படவில்லை அவன் உடன்படாததைக் கண்ட கபிலர் மனம் நொந்தார் அவர் மன வருத்தத்துடனே அவனை நோக்கி, "பெருமானே, புலவர் மனம் வருந்துமாறு அரசர் நடந்து கொள்ளல் ஆகாது, உன்னை யொத்த அறிவினையுடைய உனது குடியுள் ஒருவன், பெரும்புலவரான 'கழாத்தலையார்' என்பவரை அவமதித்தான் அதனை காரணமாக, வெற்றி நிலை பெற்றுச் சிறந்த புகழோடு இருந்த சிறப்பையும் பேரரையம் எனும் அவனது நாடு கெட்டுற்றது. என் வார்த்தையை நீ அவமதிக்கலாகாது இம் மகளிர் 'வேள்-எவ்வி' என்பானது குடியிலே படுவார்களாக பின்னை இவர் கைவண்மையுடைய பாரிமகளிர் என்று சொல்லிய என்து அறப் வார்த்தையைப் பொறுப்பாயாக பெரிய மலையிடத்து ஊர்களையுடைய நாட்டையுடையாய்! யான் நின்னை விடை கொண்டேன்," என்று கூறி அகன்றார்.

பாரிமகளிரது மணமகனைப் பற்றிப் பலர் பலவித மாகக் கூறுகின்றனர். கபிலர் அம் மகளிரைப் பார்ப் பாரது பாதுகாவலில் வைத்துத் தீயில் வீழ்ந்திறந் தனர் என்பர் சிலர், மூத்தவளான 'சங்கவை' என் பாளை மலையனுக்கு மணஞ்செய்து கொடுத்தபின்னர், இளையவளான 'அங்கவை'யைப் பார்ப்பார் பாது காவலில் விட்டனர் என்பர் சிலர், இளையவளை அவ்வை மூதாட்டியார் 'தெய்வீகன்' என்னும் சிற்றா சனுக்கு மணமுடித்தனர் என்பர் சிலர். இவற்றை வைத்துக்கொண்டு நமது அறிவிற்கும், ஆராய்ச்சிக் கும் எட்டியவாறு கதையை முடிப்போம்.

கபிலர் பெருமான் சங்கவை, அங்கவை என்ற இருபெண்களையும் அழைத்துச் சென்று, திருக்கோவ லூரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டுவந்த மலை யனை யடைந்தார். அவன் சிறந்த அரசன், வெற்றி மிக்க வேந்தன். அவன் பாரியினது பரந்த புகழைக் கேள்விப்பட்டிருந்தான். ஆதலின், அவன் பாரியி னுடைய மூத்தமகளான, சங்கவை என்பாளை மணந்து கொண்டான். அதன் பின்னர், கபிலர் இளையவளான 'அங்கவை' என்பாளைப் பார்ப்பார் சிலரது பாது காவலில் வைக்கச் செய்தபிறகு, "இனி இவ்வுல கில் இருந்து பயன் என்? வீடு பேற்றை யடைதலே தகுதி" என்று எண்ணினார். அவர் பெண்ணையாற்றின் மத்தியில் தீயுண்டாக்கினார். அக்கினிப் பிரவேசமாகத்

தயாராக விருந்த அவர், "மலைநாட்டையுடைய பாரி ! பெரிய கைவண்மையை யுடையாய் ! நீயும் யானும் கலந்து கூடிப்பிறந்து பொருந்த, யானும் நின்னுடன் கூட வருவதற்கு மனம் இல்லாமையாலே 'நீ ஈண்டுத் தவிர்க' என்று சொல்லி இவ்வாறு மாறுபட்டனை யாதலால், நினக்கு யான் பொருந்தினவன் அல்லேன் ஆதலால், நீ எனக்கு உதவிசெய்த காலங்களிலும் என்னை வெறுத் திருந்தாய் போலும். இவ்வாறு யான் பொருந்தின வன் அல்லேனாயினும், இப் பிறப்பின்கண் நீயும் நானும் கூடி இன்புற்று இருந்தது போல, மறுபிறப்பினும் நின்னோடு கூடி வாழ்க்கை ஊழ் கூட்டுக" என்று மன முருகப்பாடி, வடக்கிருந்து உயிர் நீத்தனர்

9 அங்கவை திருமணம்

நல்லிசை மெல்லியலான ஔவையார் ஒருகால் திருக்கோவலூரை யடைந்தார் அவர், பாரிவேள் அடைந்த அகால மரணத்தையும் அவன் மகளிர் பட்ட துன்பத்தையும் அறிந்தார், இளையவளான அங்கவை யை யாருக்கேனும் மணமுடித்துக் கொடுக்கவேண்டு மென்று தீர்மானித்தார்

அக் காலத்து, அரசாண்டிருந்த 'தெய்வீகன்' என்னும் அரசன் ஒருவனைத் திருமணத்திற்குச் சம் மதிக்கச் செய்தார். அத் திருமணத்தைச் சிறப்பாக நடத்த வேண்டுமென்று ஔவையார் விரும்பினார்.

ஆதலால் அவர், சேர சோழ பாண்டிய மன்னர்க்குத் தனித்தனியே திருமுகம் வரைந்தார். அவர்கள் பாரியது பகைவராதலால், வாரிருப்பரோ என்று எண்ணி, அவர்களை வருமாறு வற்புறுத்தினார்.

“ சேரலர்கோன் சேரல் செழும்பூந் திருக்கோவ
லூரளவுந் தான்வருக உட்காதே—பாரிமகள்
அங்கவையைக் கொள்ள அரசன் மணமியைந்தான்
சங்கியா தேவருக தான்.”

என்று அம்மையார் சேரனுக்குத் திருமுகம் எழுதி அனுப்பினார். பின்னர் அவர்,

“ புகார்மன்னன் பொன்னித் திருநாடன் சோழன்
தகாதென்று தானங் கிருந்து—நகாதே
கடுக வருக கடிக்கோவ லூர்க்கு
விடியல் பதினெட்டா நாள் ”

என்று சோழ மன்னவனுக்குக் கடிதம் வரைந்தனுப்பினர். அதன் பிறகு அம்மையார்,

“ வையைத் துறைவன்! மதுரா புரித்தென்னன்!
செய்யத் தகாதென்று தோமாதே—தையற்கு
வேண்டுவன கொண்டு விடியல்பதி னெட்டாநாள்
ஈண்டு வருக இயைந்து ”

என்று மாட மதுரைப் பாண்டிய மன்னற்குத் திருமுகம் தீட்டி யனுப்பினார்.

ஔவையாரின் அருட்பாட்டைக் கண்டதும் அவ்வம்மையை நன்கு அறிவாராதலால் அவர்

கட்டளைக்கு உட்பட்டு மூவேந்தரும் திருமணத்திற்கு வந்திருந்தனர். திருமணம் அணிபெற நடக்கையில் ஔவையார் பல தெய்வீகச் செயல்களை நடத்திக் காட்டினார். திருமணம் நடைபெற்றது. அங்கவை கணவனுடன் இனிது உறைவாளாயினள்.

இவ்வாறு, பாரிமகளிர் அல்லலுறு வண்ணம் கபிலர் ஒரு பெண்ணுக்கு மணம் செய்ததும், ஔவையார் ஒரு பெண்ணுக்கு மணஞ்செய்ததும் போற்றற்குரியன.

II. வேள்—ஆய்

இவன் பொதிய மலையின் தலைவன். அம் மலையை அடுத்த 'ஆய்குடி' என்பதே இவனது ஊர். ஆய் என்றும் அண்டிரன் என்றும், ஆய் அண்டிரன் என்றும் இவன் வழங்கப்பட்டான். இவனது மலை வேற்றரசரால் தாக்கமுடியாத அரணவலிமை யுடையது. இம் மன்னவன் சுரபுன்னைமாலையை யுடையவன்; யாதொரு பிரிவினையுங் கருதாது இரவலர்க்கு ஈயும் ஈகையுடையோன். இவனது நாட்டில் 'கவிரம்' என்ற பெயருடைய மலைப்பகுதியில் பல இனிய சுனைகள் இருந்தன. அவற்றில் சூரரமகளிர் வாழ்வதாக ஐதிகம் இருந்ததென்றும் அறியக் கிடக்கிறது.

> "வெறுஅஅந், ஆஅய்ங் களுடை டனங்குடைச் சிலம்பிற்
> கவிரம் பெயரிய உருகெழு கவாஅன்
> ஏர்மலர் நிறைசுனை யுறையும் சூர்மகள்"
>
> —அகநானூறு.

மேலும், இந்த ஆய்நாடு யானைக் கூட்டங்களால் நிறைந்தது. ஆய் பரிசிலர்க்கு யானைகளை வரிசை வரிசையாகத் தந்துவந்தான். இவன் ஒருநாள் காட்டு வழியே செல்லுகையில், நீலநாகம் ஒன்று ஆடையைக் கண்டவுடன் தேவன் விரும்பத்தக்க ஆடையொன்றினை விட்டு அகன்றதாகவும், அதனை ஆய் எடுத்து

வந்ததாகவும் சொல்லப்படுகிறது. அவ்வாறு காட்டி-டையே நீலநாகத்தால் கிடைக்கப்பெற்ற சிறந்த ஆடையைத் தான் தனக்கென வைத்துக் கொள்ளாது, அதனைச் சிவபிரானே அணியத்தக்கவர் என்று கருதி, அப் பெருமானுக்குப் பெரு மகிழ்ச்சியுடன் அதனை இவ் வள்ளல் சாத்தினன் என்று தெரிகிறது.

"நீல நாகம் நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆய்"

—சிறுபாணாற்றுப்படை

இவனைப் பல புலவர்கள் பாடியுள்ளார்கள் என்றாலும், அப் புலவரினும் ஆயைப் பெரிதும் புகழ்ந்து பாடியவரும், இவனது உயிர்த்தோழருமான 'முடமோசியார்' பாடிய பாக்களே பெரிதும் இன்பத்தைப் பயக்குவன வாகலானும், ஏனையோரது செய்யுட்களையும் விரிப்பின் அதிகம் பெருகுமாதலானும், மோசியாரையும் ஒரு சிலரையும் பற்றியே பெரிதும் ஈண்டுக் கூறுவோம்.

2 ஆயும் ஓடைகிழாரும்

ஆயின் கொடைச் சிறப்பைக் கேள்வியுற்ற 'ஓடைகிழார்' என்னும் பைந்தமிழ்ப் பாவலர் ஆய்குடியை

அடைந்தனர் வேலைக் கண்டு, தம் வறுமையினைத் தெளிவிக்கக் கூறினர். "பெரும, கிழிந்த ஆடையைப் பற்றியீர்த்து நீரொடு ஒழுகுதல் மிக்க பேனாகிய பகையை ஒரு பகை என்று சொல்லுவேனோ? உணவின்மையால் உடல் மெலிந்து விழிநீர் சிந்தி அலமரும் என் சுற்றத்தை வருத்தும் வறுமையை ஒரு பகையென்பேனோ? இத்தகைய என் நிலையை அறியாராய், 'நின் கைப்பொருளைத் தா' வென்று சொல்லி, என் துயரத்தை மென்மேலும் பெருக்குங் கொடிய ஆறலைக் கள்வர் அலைக்கும் பகையை ஒரு பகை யென பேனோ? இத்தகைய பகையினை அறிபவர் ஆரே யெனக் கருதி, என் வாக்கினால் நின்னுடைய பெயரை வாழ்த்தி, நின் புகழை விரும்பி ஞாயிறு சுட்டப்பட்ட சுரத்தினைக் கடந்து உன்னிடம் வந்தேன். இவ்வாறு வறுமையால் வாட்டமுறும் எம்போன்றவர்க்கு இடுவோர் அல்லவோ பயன் கருதாது பிறர்க்கு இடுவோரென்றும், எம்மை நீக்கிப் பிறர்க்கு இடுவோர் பயன் கருதி ஈவோர் என்றும் கொள்ளப்படுவர். நின் தகுதிக்கேற்ற பரிசில் ஆராய்ந்து ஈவாயாக. குளிர்ந்த நீரையுடைய துறையூரின் ஆற்றுத் துறை முன்னர் உள்ள நுண்ணிய பல மணலினும் பல வாழ்நாட்களைப்பெற்று வாழ்தியென நின்னை வாழ்த்தி, நீ தந்த செல்வத்தை நாடோறும் மகிழ்ச்சியுடன் உண்போம்," என்று பொருள்படத்தக்க செந்தமிழ்ச் செய்யுள் ஒன்றினைப் பாடினர்.

தமிழ்மொழியின் அருமையும் புலவர் பெருமையும் உணர்ந்த ஆய்வேள் பெருமகிழ்வடைந்து, புலவர் மனம் வெறுக்குமாறு பரிசில் நல்கினன் புலவர் பேரானந்தமுற்று ஆயை வாழ்த்தி அகன்றார்

3 ஆயும் மோசியாரும்

இவர் பாண்டிய நாட்டில் 'மோசி' என்ற குடியில் பிறந்தவர், அந்தண வகுப்பினர், முடவராயின மையின் 'முடமோசியார்' எனப் பெயர் பெற்றார் இவர் சோழரான 'கோப்பெருநற்கிள்ளி' என்பானால் ஆதரிக்கப்பட்டவர் உறையூர் நாட்டில் 'ஏணிச்சேரி' என்னுமிடத்தில் நெடுநாள் தங்கியிருந்தார் ஆதலால் இவர் 'உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்' என்று பெயர் பெற்றார்.

அம் மோசியார், வரையாது கொடுக்கும் வள்ளலாகிய ஆயினது புகழைக் கேள்வியுற்று, ஆயிடம் சென்று அவனது நட்பைப்பெற விரும்பினார் உடனே புலவர் ஆய் நாட்டை அடைந்தார் புலவரைக்கண்ட வேள், முகமன்கூறி அவரை வரவேற்றான் ஆயினது நற்குண நற்செயல்களை முன்னரே கேள்வியுற்றவராகலின், புலவர் அவனை நேரில் கண்டதும் தாம் கேள்வியுற்றதை உண்மையெனவே அறிந்தார், அதனால் பெருமகிழ்வு கொண்டார், தம்மையும் அறியாது தம் உள்ளத்தெழுந்த நன்மொழிகளால் ஆயை வாழ்த்தினார்

"'நின் மலையானது புலி இயங்கும் குகைகளைக்
கொண்டது, உயர்ந்த சிகரங்களையும், ஏறிவருவதற்
குக் கஷ்டமான வழிகளையும் உடையது. அவ்வழி
களில் ஏறுதலால் வருத்தமுற்று உடலவிந்து, தக்
கடி வைத்து நடக்கின்ற மெல்லிய நடையையுடைய
வரும் வளையல் அணிந்த கையையுடையவருமான
விறலி என்பினோர், பொன்னைக் கம்பியாகச் செய்
தாற்போன்ற முறுக்கடங்கிய நரம்புகளையுடையதும்,
வரிப்பாட்டு ஸ்வரஸ்தானங்கள் தோறும் மாறி மாறித்
தாவிச் செய்வதுமான யாழை வழிநடத்தலாலே தளர்
வுற்ற நெஞ்சத்தோடு ஒரு பக்கத்திலே அணைத்துக்
கொண்டு புகழுதற்கு அமைந்த தலைமையையுடைய
நினது நல்ல புகழை நினைத்து வந்தேன் யான்!
எனது இறைவ!" என்று பாணன் கூறிய மாத்தி
ரத்தே கன்றுகளுடனே உரல்போன்ற அடியினை
யுடைய யானைகளை அணியணியாகச் சாய்த்துக் கொ
டுக்கும் வண்மைபொருந்திய மலையையுடைய நாடனே!
பாணரும் புலவரும் கூத்தரும் நின்னது பொருள்களைத்
தத்தமதென வளைத்துக் கொள்வாராகலானும்,
நீ அவற்றை 'எம்முடையவை' எனக் கூறி அவ
ரிடத்தினின்றும் மீண்டும் பெறாத அருங்குணம்
வாய்ந்தனை அக்குணம் இனியும் அவ்வாறே நிலை
பெறுக, பகைவரது மிக்க மாறுபாட்டை வென்று
வெல்லும் வலிமையையுடையவனும் யாவரும் ஒப்பப் புகழும்
நாட்டை யுடையவனும், சிறப்புப் பொருந்தியவனு

மான ஆயே! உன்னிடம் யான்வந்தது யானைவேண்டி யன்று, குதிரை வேண்டியன்று, தேரை வேண்டியு மன்று, நின்னைக் காணவேண்டு மென்ற விருப்பத் தாற்றான்!" என்று, அவனது கைக் குணங்களையும், மலையின் பெருமையையும், தான் வந்த நோக்கத்தை யும் நற்றமிழில் நன்கெடுத்துக் கூறினார்.

ஆயவேள் மோசியாரது அருங் குணங்களை ஆய்ந்து பார்த்து அவரிடம் அன்பு கொண்டான், அவர் வாக்கை வேத வாக்காய் மதித்தான், அவர் சொற்படியே எக் காரியத்தையும் செய்து வந்தான். ஆயது அருங்குணங்களைக் கவனித்த மோசியாரும் அவனிடம் நேசங் கொண்டார், ஆயைக் காணு முன்னர்ப் பல் அரசரைத் தாம் பாடியதற்காகப் பெரிதும் வருந்தினார் என்னில், வையத்தாரின் பெருமையும், புலவர் அருமையும் ஆழ்ந்து நோக்குபவர் மிகச் சிலரே. அச் சிலர் நல்லொழுக்கங்களையும் மாரிபோன்றீகையும் உடையவர்களாயிருத்தல் வேண்டும். அவர்களை எத்துணைப் பாடல்களாலும் பாடிப் புகழலாம், அவற்றிற்கு அவர் அருகரே என்பது மோசியாரது எண்ணம்போலும். "இமயமலை வானளாவியது, குவளை மலர்களையுடைய பல சுனைகளையுடையது, அச் சுனைகளின் பக்கங்களில் தகரமரங்கள் குளிர் நிழலைப் பரப்புகின்றன, அம் மலையில் உறையும் கவரிமான்கள் நரந்தையையும் நறிய புல்லையும் மேய்ந்து, முற்கூறிய சுனைகளொன்றில் நீரைக் குடித்துத் தகரமர நிழலிலே

ஞாங்கரும் இயல்பை யுடையன் இத்தகைய நிகழ்ச்சி யைக் கொண்ட இமயமலையை வடக்கேயும் தென் திசைக்கண் ஆய் குடியையும் பெற்றிராவிடில், இவ் வகன்ற உலகம் கீழ்மேலாகும். இத்தகைச் சிறப் புப் பொருந்திய ஆயவேளை யன்றோ யான் முன்ன தாகப் பாடியிருக்கவேண்டும். இவனை விட்டு ஏனை யோரைப் பாடினேனே பாவியேன்! அவ்வாறு பாடிய குற்றத்தால் எனது உள்ளம் அழிந்து போவதாக, ஆயையன்றிப் பிறரைப் புகழ்ந்த நாவும் கருகியாற பிளக்கப்படுவதாக, அவன் புகழையன்றிப் பிற புகழைக் கூறக் கேட்ட என் செவியும் பாழ்பட்ட ஊரில் உள்ள கிணறுபோலத் தூர்வதாக," என்று கூறித் தம்மைத் தாமே நொந்துகொண்டார் புலவர்.

இதனால், ஆயிடத்து எத்துணைய பேரன்பு மோசி யார் கொண்டிருந்தனர் என்பது வெள்ளிடை மலை. மேலும், ஆயின் புகழ் அவன் காலத்தகச்சா பெற்ற புகழினும் மேம்பட்டிருந்ததென்பது பிரசித்தம். இவ் வுத்தம வேளின் சிறப்புக்களை இப் புலவர் பெருமான் திருவாக்காலேயே பின்னரும் அறியலாம்.

4. மோசியாரும் மலைவளமும்

ஒருநாள் மோசியார் ஆயின் ஆட்சிக்குட்பட்ட பொதிய மலையின் காட்சியைக் காணச் சென்றார். வானுற வோங்கி வளம்பெற வளர்ந்து நிற்கும் மரங்

களின் வரிசையும், தெளிந்த நீர் அருவிகளின் நீர்ப்பெருக்கும், வானத்தை யளாவும் மலைக்கோட்டும் ஆயப்பாட்டை அணிபெறச் செய்தன வென்பது மிகையாகாது. இத்தகைய பொதியமலையின் இயற்கைத் தோற்றமும் வளப்பமும் புலவர் மனத்தை ஈர்த்தன. புலவர் தம் வசமிழந்து, "ஆ! இம் மலை வானளாவியது, இம் மலை புதரியில் முகில்கள் படிகின்றன, இதன் கண் பல்மரங்கள் மிகுந்துள்ளன. பலாவின் கிளைகளில் மந்திகள் வசிக்கின்றன. அக் கிளைகளில் பரிசிலர் தூக்கி வைக்கப்பட்ட பிணிப்புப் பொருந்திய மத்தளங்கள் இருக்கின்றன. அவைகளைப் பலாப் பழங்களென்று எண்ணிய மந்திகள் அவற்றின் கண்களைத் தட்டுகின்றன. தட்டியவுடன் மத்தள ஓசையுண்டாகின்றது. அவ் வோசையால் அப் பலாவின் கண் வாழும் அன்னச் சேவல்கள் நடுக்கிட் டெழுந்து, மத்தள வோசைக்கு மாறாகக் கூவுகின்றன. இத்தகைய இயற்கை வளப்பினைக் கொண்டது இம் மலை. இச் சிறப்புவாய்ந்த மலையை யுடையோன் மலைபோன்ற தோள்களையுடைய எம் ஆய்வேள். இம் மலையை ஆயிடத்துப் பாட வரும் விறலி அடையலாமே யன்றி, பெருமை பொருந்திய அரசர் அடைய முடியாது," என்று பொதியமலையின் பெருமையினைப் பாராட்டிக் கூறினார். இப் பாடலால், ஆய் என்பானது நாட்டின் வளமும் அவனது வலிமையும் புலப்படுதல் காண்க.

அம் மலைச்சாரலில் கூட்டங் கூட்டமாக யானைகள் வசிப்பதைப் புலவர் கண்டார், அவை எண்ணற்று இருப்பதைப் பார்த்து ஆச்சரியம் கொண்டார். அவர், "களிறுகளை மிகுதியாகக்கொண்ட அழகிய இக் காடு, முகில்கள் சென்று உறங்கும் உயர்ந்த மலைக்குக் கீழுள்ளது, சுரபுன்னைப் பூவால் தொடுக்கப்பட்ட கண்ணியினை யுடையானும், கூர்மையான வாளினை யுடையானுமான அண்டிரனது மலையைப் பாடி இக் களிறுகளைப் பரிசிலாகப் பெற்றதோ?" என்று பொருள் வைத்து,

"மழைக்கணஞ் சேக்கு மாமலைக் கிழவன்
வாழைப்பூங் கண்ணி வாய்வா ளண்டிரன்
குன்றம் பாடின கொல்லோ
களிறுமிக வுடையவிக் கவின்பெறு காடே"

என்று பாடி வியப்புற்றார்.

பிறகு, அவர் மலைநாட்டு மக்களான குறவர்களைக் கண்ணுற்றார். அவர்கள் செய்கையையும் பாணர் கூட்டங்களோடும் சேர்த்துப் பின்வருமாறு கூறி, ஆயவேளின் பெருமையினை நினைந்து வியந்தார். "இக் குறமக்கள் குறுகிய இறப்பையுடைய சிறிய வீடுகளில் வசிக்கின்றனர், பலாவின் பழத்தை வடிக்க முயன்ற குழாயில் வார்த்திருந்து, அது நன்றாக முதிர்ந்ததும் அத்தேனைக் குடித்துவிட்டு வேங்கை மரத்தையுடைய முற்றங்களின் குரவைக் கூத்தாடுகின்றனர். இனிய

கனிகளையுடைய பழங்களைக்கொண்ட பலாமரங்கள் இம் மலைநாட்டில் அதிகமாகக் காணப்படுகின்றன. இத்தகைய வளப்பம் பொருந்திய மலைநாட்டை யுடையவன் ஆய் அவன் கொல்லுகின்ற போரைச் செய்யும் தலைவன் அவன் இரப்போர்க்குக் கொடுக்க யானைத்தொகை, விண்மீன்கள் எண்ணிக்கையினும் மேம்பட்டுமேயன்றிக் குறையாது மாரிக்காலாகிய ஆரத்தையுடைய ஆயே! நின்னையும் நின் மலையையும் பாடி வரும் பரிசிலர்க்கு இனிய முகத்தோடு மனம் உவந்து நீ கொடுத்த யானைகளை யெண்ணினர், அவை, நீ கொங்கரை மேற்கட்டுக்கொண்டோ ஓட்டிய காலில் அவர் புறங்கொடுத்தோடிவிட்டுப் போன வேல்களினும் பலவா கின்றன. இவ்வாறு நீ எண்ணிறந்த யானைகளைப் பரி சிலர்க்குக் கொடுத்தும், இன்னும் கணக்கற்ற களிறுகள் உன் வசத்தே நிற்பனவன். இவை இவ்வாறு மிகுந்திருப்ப தற்குக் காரணம் என்ன? நின் நாட்டகத்து உள்ள இளைய பெண்யானை ஒரு கருப்பத்துக்குப் பத்துக் கன்றுகளைப் பெறுமோ?"

இவ்வாறு, புலவர் கோமான் மலைநாட்டு வளப்பத் தைக் கண்ணுற்றுக் களிகொண்டு, ஆயின் அரண்மனை நாடி வருகையில் விறலி ஒருத்தியைச் சந்தித்தார். அவர் அவளை நோக்கி, "மெல்லிய இயல்பினையுடைய விறலி! நல்ல புகழையும், மழைபோன்ற வண்மையையும், அழ கிய தேரினையும் உடைய வேள்-ஆயைக் காண விரும்பு

வாயாயின், மாட்சிமைப்பட்ட கிளர்ந்த மணம் பெற்ற கூந்தல் பொதியமலைக் காற்றால் அசைய, பீலியையுடைய மயில்போலக் காட்சியுண்டாக நடந்து செல்வாய்" என்று கூறி யகன்றார்.

5 ஆயின் கொடைச் சிறப்பு

ஒரு நாள் புலவர் பெருந்தகை ஆயின் வள்ளற் றன்மையை மேலும் விளக்குவான் வேண்டி, "ஆய் வேட்டைக்குச் செல்வன், வேட்டை முடிந்ததும் புலித்தோலை விரித்துக் கணக்கு வேட்டையாற் கிடைத்த முள்ளம் பன்றியின் தசை, சந்தனக்கட்டு, யானைமருப்பு ஆகிய இவற்றைக் குவித்துவைத்துப் பாடிவரும் பரிசிலர்க்குக் கொடுக்கும் பண்பினை யுடையவன். இத்தகைய கொடைச்சிறப்புடையவன் ஆய் பெருவள்ளல்" என்னும் கருத்தமைந்த செழுமிய பாடலைப் பாடினார். பின்னர், "இப் பாரில் இம்மையில் அறங்கள் செய்தால், அவை மறுமைக்கு உதவு மென்று கருதிய பொருளை விலையாகக்கொடுத்து, அதற்குப் பதிலாக அறத்தைக் கொள்ளும் அறவணிகன் ஆயல்லன் அண்டிரன், அவனது கொடை, 'பெரியோர் செய்தவழி' என்று யாவரும் கருதும்படி அந் நற்செய்கையளவில் பொருந்தியது" என்ற பொருள் அமைந்தது,

"இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்,
பிறரும் சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன் றவன்கை வண்மையே"

என்று பாடினார்

6 ஆயின் இறுதி நிலை

இவ்வாறுகப் புலவர்களால் போற்றப்பட்டு வந்த ஆய்வேள், வறியோர்க்கே தன்பொருள் அனைத்தும் நல்கி வறுமை யடைந்தான், சுருங்கக் கூறின், அவனது மனைவியின் மங்கல நாணைத் தவிர, அவனிடத்து எஞ்சிய பொருள் ஒன்றுமில்லை நாளடைவில் வறுமை மிகுந்தது வறுமையால் ஆய்வேளின் நாடு அழகு குன்றியது அரண்மனையில் வாழும் அவன் மனைவிமார் மகிழ்ச்சி யற்றார்கள் அவர் முகமும் அகமும் பொலிவுடனே விளங்கின ஆய், ஈறப்பாரிப்பத்திறந்தவன் தன் பொருள்களைச் செலவழித்தானே யன்றி விளைவாரி யதில் பார்க்கவில்லை யன்றோ?

ஆய்க்கு நேர்ந்த வறுமையை ஏணி மோசியார் பெரிதும் துக்கித்தாரெனினும் அவனை உற்சாகப் படுத்த வேண்டி, "களாப்பழம் போலும் கரிய கோட்டையுடைத்தாகிய சிறிய யாழைக் கொண்டு பாடும் இனிய பாட்டில் வல்ல பாணர் பரிசில் பெற்றுப் போனார்களாக, களிறுகள் இல்லாத பக்கத்தையுடைய

நெடிய குறியின் கண்ணே கட்டு மயில்கள் தத்தம் இனத்தோடு கூவக்கக் கக்கத்து ஆயின் கோயில் அக் கோயில், ஆயினு மனைவியர் மங்கல நாணொடு மற்றைய அணிகலன்களை இழந்திருப்பதால் பொலி வழிந்த அசாயந்தென்று பிறர் சொல்லுவர், நாகர் தமக்கு இனிதான தாளிப்பையுடைய அமுதைப் பிறர்க்கு உத வாது, தம்முடைய வயிற்றையே நிறைத்துப் புகழைச் சம்பாதியாத பெருஞ் செல்வர்களைப் போலப் பொலிவு அழியாமல் ஆயின் அரண்மனை அழகு மிகுந்து விளங்கும்" என்ற கருத்தைக் கொண்ட பைந்தமிழ்ப் பாவினைப் பாடினர்.

பின்னர்ச் சின்னாட்களில், தமிழ் மக்கட்குப் பெருந் தாய் போன்றவனும், பல்வளம் பெற்றவனும் சற்குணனுமான வேள்-ஆய் மண்ணகவாழ்வை நீத்து விண்ணகவாழ்வை மருவினன். அவன் உயிர் துறந்த காலையில் விண்ணிலே பெரும் ஓசை யுண்டாயிற்று. அதைக்கேட்ட மோசியார், "ஆ! திண்ணிய தேரை இரவலர்க்கீந்தவனும் குளிர்ந்த மாலையை யுடையவனுமான வேள் ஆய் வருகின்றானென்று, ஒள்ளிய கொடியினை யும் வச்சிராயுதத்தினையும் உடைய கடவுள் இந்திர னது கோயிலினுள்ளே முரசம் முழங்க வானத்தின் கண் ஓசை தோன்றிற்று" என்ற பொருளமைத்து,

"திண்டே ரிரவலர்க் கீத்த தண்டா
ரண்டிரன் வரூஉமென்ன வொண்டொடி

வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுட்
போர்ப்புறு முரசங் கறங்க
ஆர்ப்பெழுந் தன்றால் விசும்பி னானே"

எனப் பாடினார். ஆயின் மரணத்தைக் கேள்வியுற்ற 'குட்டுவன் கீரனார்' என்னும் புலவர் பெரிதும் வருந்தினார். அவர் ஆயின் நற்குண நற்செயல்களை நினைந்து நினைந்து ஆற்றுத்துயர் அடைந்தார். அப் புலவர், "காற்றிற் கேற்ப நடக்கும் அசைந்த நடையையுடைய குதிரைகளையும் யானைகளையும் தேர்களையும் அழியாத புகழ் வருவாயைப் பெற்ற நாட்டையும் ஊர்களையும் பாடுவார்க்குக் குறைவறக் கொடுக்கும் ஆயாகிய அண்டிரன், தன் உரிமை மகளிரோடே 'காலன்' என்று சொல்லப்படும் கண்ணிலியால் கொண்டு செல்லப்பட்டுத் தேவருலகத்தை அடைந்தான் போலும். பொலிவிழந்த கண்களையுடையராய்த் தம்மைப் பாதுகாப்போரைக் காணாது அரவாரிக்கும் சுற்றத்தாருடனே செயலற்று அறிவுடைய புலவர் வறுமைப்பிணியால் வாடுங்காலம் வந்து விட்டதே! இஃதோ நீ இருந்தவாறென்னே?" என்று கூறிப் புலம்பினார்.

III. வள்ளல்—அதியமான் நெடுமானஞ்சி

III. வள்ளல்—அதியமான் நெடுமானஞ்சி

1 அதியமான்

தமிழ்நாடுகளில் ஒன்றாகிய சேரநாடு மலைவளம் பெற்றது. பச்சைப்பசேலென்ற பசுந்தானாடை கட்டிய பல குன்றுகளும், வானளாவி நிற்கும் பல மரங்களின் வரிசையும், காட்டாறுகளின் நீர்ப்பெருக்கும் மலையருவிகளின் வளமும், அந் நாட்டை அணி பெறச் செய்தன. வாவிகளும் தடங்களும் அந்நாட்டைச் சுற்றிலும் மிகுந்திருக்கும். அன்பு மிக்க அத் தடங்களின் கரைகளில் மழலை பேசும் கிள்ளைகள் ஒரு புறமாயும், நடை பழகும் மயிலினங்கள் ஒரு வரிசையாகவும், இன்னிசை பாடும் குயிலினங்கள் மற்றொரு மருங்காயும், அன்றலர்ந்த நறுமணம் நாறப்பெற்ற அன்ன மலர்களில் நிறைந்துள்ள மதுவை யுண்டு மயக்கத்தால் ரீங்காரம் செய்யும் சுரும்புகள் ஒரு புறமாயும் நிரம்பி யிருக்கும் அழகுக் காட்சியை ஆங்குக் காணலாம்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சேர நாட்டில் ‘தகடூர்’ என்று ஓர் ஊர் உளது. அந் நகரத்தில் எல்லா நாட்டு வளங்களும் நிறைந்து பொலிந்தன. அப் பதி

தான்று இயற்கை யமைப்பினாலும், செயற்கை யமைப் பினாலும், எந் நகரத்தினும் சிறப்புற்றதென்றே கவிகள் கூறுவர். மேலும், அந் நகரக் காட்சி, பல் வகைப் பாவலர்க்குப் பொழுது போக்கையும் இன்பத்தையும் இடையறாது உண்டு பண்ணிய தென்னலாம். அக் காலத்தில் செல்வம், புகழ், கல்வி இவைகளில் மேம் பட்ட மக்களில் பெரும்பாலோர் அந் நகரில் உறைந் தனர்.

இவ்வாறு சிறந்து விளங்கிய நகரை யாண்டு வந்தவன் 'அதியமான் நெடுமானஞ்சி' என்ப வன். அவன் கட்டவிழ்ந்த நல்ல மலர்களாலாகிய குளிர்ச்சி பொருந்திய மாலையை யுடையவன், யாவரும் அஞ்சத்தக்க படையை யுடையவன்.

மேலும், இந்த அதியமான் போர் செய்கின்ற கரும்பு வில்லையுடைய வசந்த காலத்திற்குரிய மன்மதனைப் போன்ற சிறந்த அழகினை யுடையான், பெரிய மலையைப் போலும் பாரத் தோளினை யுடையவன், போர் செய்கின்ற கடல்போன்ற திரண்ட சேனையை யுடையவன், மாறுபட்ட மிக்க கோபத்தை யுடைய யானைபோலும் கோபத்தினை யுடையவன். இவன் மேகத்தினும் பன்மடங்கு அதிகமாய்க் கொடுக்கின்ற வளம் பொருந்திய கையை யுடையவன். இவ் வள்ளல் கருணைக்கு இருப்பிடமானவன், நல்ல அறமாகிய பயிரினது வேலியாக ஒப்பிடப்படுபவன். இவன்

ஏனைய பகை அரசர்களாகிய யானைகளுக்கு ஆண் சிங்கம் போன்றவன், சேரமானது உறவினன், சிற்றரசரையும் பெருவேந்தரையும் அநேக போர்களில் வென்றி கொண்டவன். இவன் பெயர் 'அதியமான் நெடுமானஞ்சி' எனவும், 'நெடுமானஞ்சி' எனவும், 'அஞ்சி' எனவும் வழங்கும்.

2. அஞ்சியும் பெருஞ்சித்திரனாரும்

அஞ்சி என்பான் தகடூரை யாண்டு வருங்கால், 'பெருஞ்சித்திரனார்' என்னும் வயங்குமிழ்ப் புலவர் அவனைப் பாடிப் பரிசுபெற விரும்பினார். அவர் தம் ஊரைவிட்டுத் தகடூரை அடைந்தார். அடைந்தவர் அஞ்சியைக் காணுதற்குப் பல நாள் காத்திருந்தனர். வறியராகக் கிடப்பதே தம் தொழிலாகப் பெற்ற அக் கொடைவீரன் யாது காரணத்தாலோ பரிசில் வேண்டிக் காத்திருந்த புலவர் பெருமானை நேரில் வந்து காணவில்லை. அவன் அவரது வருகையை யுணர்ந்து, தன் ஏவலர் மூலமாய்ப் பரிசிலைக் கொடுத்துப் புலவரைப் போம்படி செய்தான். புலவர்,

"முற்றிய திருவின் மூவ ராயினும்
பெட்பின் றீதல் யாம்வேண் டலமே"

என்ற மனப்பான்மை யுடையவ ராதலின், அஞ்சியின் செயலை வெறுத்தார். அவர் பரிசில் கொணர்ந்தானை நோக்கி, "யான் குன்றுகளும் மலைகளும் பல கடந்து

எண்ணி வந்தேன் பரிசில் பெறாது திரும்பலானார், என்னை அன்புற்று அருளி 'இப்பொருளைக் கொண்டு இவ்வாறு போக' என்று சொல்ல என்னை எத்தகை மையன் என அறிந்தான் பண்பில்லாத நெடுமானஞ்சிய அரசன்? என்னைப் பாராமுகத்தால் சொல்லிய பாங்கிலே தந்த இப்பொருளைப் பெறுதற்கு யான் ஓர் [illegible] கருதும் பரிசிலனல்லேன். என் தகுதி முதலாகிய வற்றை யறிந்து கொடுப்பின், கொடுப்பது தினைத் துணை யளவாயினும் நல்லதாகும்" என்னும் கருத் துப்பட,

' குன்று மலையும் பலபின் னொழிய
வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கென
நின்ற வென்னயந் தருளி யீதுகொண்
டீங்கனஞ் செல்க தானென வென்னை
யாங்கறிந் தனனோ? தாங்கருங் காவலன்,
காணா தீத்த விப்பொருட் கியானோர்
வாணிகப் பரிசிலன் அல்லேன், பேணித்
தினையனைத் தாயினு மினிதவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே"

என்ற பைந்தமிழ்ப்பாட்டில் தமது பெருமிதம் தோன்றக் கூறி, அவ்விடம் விட்டகன்றார்.

3 அதியனும் அவ்வையும்

சோநாட்டில் தமிழ்ப் பழங்குடியாகிய பாணர் குடியில் 'அவ்வையார்' என்னும் கவிதைப் புலமை வாய்ந்த மெல்லியலார் பல நாடுகண்டுகேட்குமுன் பிற

தார். அவர் இளமையிலேயே நற்றமிழை நன்முறைப் பயின்று நல்லிசைப் புலவராய் விளங்கினார். அவர் பல்திறப்பட்ட தமிழ் மன்னர்கள்பாற் சென்று கவிபாடிப் பரிசில்பெற்று வாழ்ந்தனர். அவ்வம்மையார் அஞ்சியின் நற்குண நற்செயல்களைக் கேள்வியுற்றார். அவனைக் காணவேண்டும் என்னும் அவா பிடர்பிடித்துந்த, அவர் தகடூரை அடைந்தார். அடைந்த அம்மையார் அவனைக் கண்டு, "பெரும! இரப்போர்க்கு ஈயும் மடவார் மகிழ்துணை நெடுமானஞ்சி! கடலால் சூழப்பட்ட இந்நிலவுலகத்தில் வறுமையால் வாட்டமுற்றோர்க்கு வேண்டுவ தருதி நீ எனக் கேட்டேன். யான் சேரநாட்டில் பாணர் குலத்திற் பிறந்தவள். என் பெயர் ஔவை என்பது. யான் வறுமைப் பெருந்துயர் உழந்தேன். நீ மனம் உவந்து இரைந்து கொண்டு இக்கணைக் களிப்பாய்" என்று, தன் வறுமையினையும் அவனது பெருமையினையும் பல பாடல்களால் வெளிப்படுத்தினார்.

அஞ்சி என்பவன், அம்மையாரின் புலமையையும் ஒழுக்கத்தினையும் உயர்த்துணர்ந்து பெருமகிழ்வு கொண்டனன். அவருக்கு இன்சுவை யமுதை இன்பொடூட்டினன். "பரிசில் கொடுத்துவிடின் இவர் இவணைவிட்டேகுவர்" என்று எண்ணி, அவரைப் பிரிய மனமற்றவனாய்ப் பரிசில் அளிக்காது காழ்த்தினன். அம்மையார் சின்னாள் அவனது அரண்மனையில் தங்கியிருந்தனர். அவன் பரிசில் கொடுக்கவில்லை. அம்மையார் சினங்

கொண்டார், அதுநியை நேரிற்காணவும் பிரியப்படாது, அவனது வாயிற் காப்போனிடம் சில கூறியகலவேண்டுமென்று விரும்பினார். அவர் அவனை நோக்கி, "வாயில் காப்போய்! வாயில் காப்போய்! ஈகைத்தன்மை யுடையோரது செவியிலே, விளங்கிய சொற்களை விதைத்துத் தாம் எண்ணிய பரிசிலை விளைக்கும் வலிமை யுடைத்தாகிய நெஞ்சினையுடையார் பரிசிலர், மேலும் அப் பரிசிலர் பரிசிலால் வாழ்வு இல்வாழ்க்கையை யுடையார். அவர் இப்பக்கமாய் இவ்வாயிலை அடைக்காது வைக்குள்ள வாயில் காப்போய்! வினைத்த குறிக்கோளினையுடைய குரிசில் நெடுமானஞ்சி தன் தரம் இத்தன்மைத்தென்று அறியானோ? தன் தரத்தை அறியானாயினும் என் தரத்தையேனும் அறியானோ கொல்லோ! இவ்வுலகம், அறிவு புகழ்ந்து உடையோர் இறந்தாராக வறிய இடத்தையுடையதாகி விடவில்லையே, ஆகலால் யான் இப்பொழுதே புறப்படுகின்றேன் என்று யாழ் முதலிய பொருள்களைக் கட்டுக் கொண்டேன்? இவனை யறிந்தோர் தமிழை யோதினோன்? யான் எத்திசைச் செல்லினும் அத்திசைக் கண் சோறு உண்டு, யான் செல்வதற்கு இன் அரசருக்கு கூறு" என் முதலியவர் கூறிப் புறப்பட்டார்.

அமைச்சர் புறப்பட்டதைப் புலவர்தான் அறியுடன், தான் செய்தது பிழையென்று உணர்ந்து, அவன் மனையைவிட்டு வழிப்படுக்கும் அவ்வமயமாய் குதித்தவ

பணிவுடன் தன்னை மன்னிக்குமாறு வேண்டினான். பின்னர், அஞ்சி அம்மையாரைத் தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்று அறுசுவை யுண்டி அன்புடன் அளித்துப் பரிசில் பல நல்கினான்.

அவனது தாராளக் கொடைத்திறத்தைக் கண்ட ஔவையார் அகமிக மகிழ்ந்தார். "அந்தோ! அதியமானது கொடைத்திறத்தையும் தண்ணளியையும் அறியாது, யான் முனிவு கொண்டேனே" என்று இரங்கினார். பின்னும் அவர், தம் உள்ளத்தோடு சொல்பவராய், "அதியமான் அணிகலம் அணிந்த யானையையும் இயன்ற தேரையும் உடையவன் அவன், ஒருநாள் அல்ல, இரு நாள் அல்ல, பன்னாளும் பயின்று பலரோடு சேர்ந்து செல்லினும் முதல் சென்ற நாளில் எத்தகைய விருப்பம் காட்டுதலையுடையவனாக இருப்பானோ, அத்தகைய விருப்பமே யுடையவன் அவன். பரிசில் நீட்டிப்பினும் நீட்டியாதொழியினும், 'யானை தனது தந்தங்களிடையே வைக்கப்பட்ட கவளம்போல' அப் பரிசில் நம் கையகத்ததே, அது தப்பாது, உண்ணுதற்கு இச்சித்த நெஞ்சே! நீ பரிசிற்கு வருந்தவேண்டா, அவன் தாள் வாழ்வதாக" என்று, அவனது மனப்பான்மையையும், அவன் பரிசில் தாராதொழியான் என்ற உறுதியையும், தாம் அவனிடத்துக் கொண்டுள்ள அன்பையும் வெளிப்படுத்தினார்.

ஒரு நாள் அவ்வையார் தகடூரைச் சுற்றிப்பார்த்து மலைவளப்பத்தைக் கண்டு மகிழ்ந்தார். அப்போது விறலி ஒருத்தி மத்தளத்தை யெடுத்துக்கொண்டு அவ்வழியே சென்றுகொண் டிருந்தாள். அவளைக் கண்ணுற்ற அவ்வையார், "இவ்வரிய வளப்பமுடைய விறலி! பல வேற்படையையுடைய எம் அண்ணல் அதியமான் சேய்மைக்கண்ணனல்லன். உலகம் முழுவதும் வறுமையுறுதலையுடைய காலமாயினும், நீ அவன்பாற் போவையானால், நின்னைப் பாதுகாக்க வல்லவன் அவன் அவனே. சிறந்த கொடை வீரன், தண்ணளி நிறைந்த அண்ணல்" என்று கூறிப் போந்தார்.

இவ்வாறு அவ்வையார் அதியனின் அரிய குணங்களை எந்நேரமும் நினைந்து நினைந்து, தம் உள்ளத்தினின்று ஊறி எழுகின்ற செந்தமிழ்ப் பாவால் செம்மையுற எடுத்துப்பாடும் தொழிலையே மேற்கொண் டிருந்தார். அந்த அதியனை விட்டுச் செல்ல அவர் மனம் இடந்தரவில்லை. அம்மையாரை விட்டுப் பிரிய அதியனும் உடன்பட்டானில்லை. அவர் இல்லாத அவைக்களம் தாமரை யற்ற தடம்போலும், கண்ணில்லா முகம் போலும் பொலிவற்று விளங்கும் என்று அதியமான் எண்ணினான். அவ்வையாரும் தம் புலமையாலும், ஒழுக்கத்தாலும் அதியனின் அன்பைக் கவர்ந்தார். அவனுக்கு உயிர்க்குயிரே போன்ற அமைச்சராகவும் விளங்கினார் அவ்வையார்.

Four Great Heroes
Acc. 9482

4 அஞ்சி, நெல்லிக்கனி பெற்று அவ்வைக்கு ஈதல்

ஔவையார் பாடும் இனிய பாடல்களைக் கேட்டுப் பேரானந்த முற்றிருந்த அஞ்சி, ஒரு நாள் ஒரு மலைப் பக்கத்துக்குச் சென்றிருந்தான், அம் மலையில் கரு நெல்லி மரம் ஒன்றைக் கண்டான் அம் மரத்தில் பழுத்த நெல்லிக்கனியொன்று இருந்தது, அதனை அரிதின் முயன்று பெற்றான் பெற்ற வேந்தன், "இதனை உண்போர் நெடுங்காலம் உயிர் வாழ்வர் என்று சொல்லக் கேட்டுள்ளேன் என்றாலும், இதனை உண்டு நெடுங்காலம் உயிர்வாழ எனக்கு விருப்பமில்லை உலக மக்களுக்குப் பெரிதும் பயன்படுவோரே இக் கனியையுண்டு நீடு வாழ்வது தகுதியேயன்றி, உலகிற்கு ஒரு சிறிதும் பயன்படாத நாயேன் இதனை உண்டு, நீண்டகாலம் நடைப்பிணமாகத் திரிவதில் பயன் என்னை? இதனை யாருக்கு ஈயலாம்?.. சரி, தமது நாவன்மையால் அரிய பெரிய பாக்களை இயற்றி உலகைத் திருத்தும் ஔவையாருக்கே ஈவேன், அவரே இதனை உண்ணத் தக்கவர்" என்று தனக்குள் கூறி முடிவு செய்து கொண்டான் பின்னர், தன் அரண்மனையை யடைந்து அப்பெருமான் ஔவையாருக்கு அக் கனியின் ஆற்றலைக் கூறாமலே கொடுத்தான் ஔவையார் அதனைத் தின்றார் உண்டபோதுக்கு உடனே இனிமையைத் தரத்தக்க கனியாதலால், அதனை உண்டதும்

அம்மையார் தாம் ஏதோ புதிய பலம் பெற்றதாக எண்ணினார்; பின்னர் உண்மையை யுணர்ந்தனர்; தன்னினும் தம்மை மேலாக மதித்த அருமையின் அருங் குணத்திற்கும் செயலுக்கும் வியந்தார். அவர் அந்த அருமையை நோக்கி, "வெற்றியுண்டான தப்பாத வாளை யெடுத்துப் பகைவர் போர்க்களத்திலே பட வென்ற வீர! கழுவிடப்பட்ட வீணலை பொருந்திய மன்ன! பெரிய கையினையுடையாய்! கோமானே! மாற்றாரைப் போரின்கண் கொல்லும் வீரச் செல்வத்தினையும் பொன்னாற் செய்யப்பட்ட மாலையினையும் உடைய அரசே! நீ இளம்பிறையைச் சடையிலே தாங்கியவனும் நீலமணிபோலும் கரிய மிடற்றினையுடையவனுமான சிவபெருமானைப்போல நிலைபெற்று வாழ்க்கடவாய், பெரிய மலையிடத்து விடரின்கண் அரிய கருநெல்லியின் இனிய பழத்தைப் பெற்றும் அதனை உண்டு அதனாற் பெறும் பயனையும் பொருட்படுத்தாது, அப்பேற்றினை எமக்குக் கூறாது உண்ணே அளித்தனை; நின் செயல் சாலவும் வியக்கத்தக்கதே" என்று அரசனோடு கூறி மகிழ்ந்தார். மேலும், அம்மையார் அவனைப் புகழ விரும்பி, "மன்னே! நீர்த்துறையில் படிகின்ற யானையின் கோடுகளைச் சிறார்கள் கழுவுகிறார்கள், அச் செயலால் அந்த யானை அச் சிறார்கட்கு எளிதென்று கூறமுடியுமோ? முடியாது, அதுபோல, எங்கட்கு எளியனாய் விளங்கும் நீ நின் பகைவர்க்கு எளியனாவையோ?

பெரும! நீ நின் பகைவர்க்கு இன்னாய்" என்று, அவனது எளியருக்கு இனிமை, வீரம் முதலியன விளங்கப் பல கவிகள் பாடினார். அஞ்சி என்பான் அவற்றைக் கேட்டு இன்புற்றிருந்தான்.

5. அவ்வையும் தொண்டைமானும்

அஞ்சி தகடூரை யாண்டு கொண்டிருந்தகாலை, 'தொண்டைமான்' என்னும் அரசன் காஞ்சி நகரத்தை யாண்டு வந்தான். அம் மன்னனும் படை வலி பெற்றவன். அவன் அஞ்சியைத் தன்னினும் மெலியான் என்று எண்ணி, அவன்மீது போருக்கெழ விரும்பினன். அச் செய்தியை யுணர்ந்தான் அஞ்சி. "என் நாடு, கானாறும் மலையாறும் உடையதென்பதை அக் காவலன் கருதவில்லை போலும், அவற்றைக் கருதாவிடினும் என்னுடைய தோள்வலியும் என்னுடைய வாள்வலியும் கருதினானோ? அவற்றையும் அவன் கருதவில்லை எனத் தெரிகிறது. அவன் தன்னுடைய பேதைமையினால் என்னை எளிதாகக் கருதிவிட்டனன் போலும்; நன்று, நன்று அவன் என்மீது போருக்கு வந்தால் தோல்வியுறுவான் என்பது திண்ணம். அவனைப் போருக்கு வாராது தடுப்பதே சிறந்தது. எனது ஆற்றலையும் எனது படை வலிமையையும் அவன் உணர வேண்டும். அவனுக்கு நன்கு உணர்த்த வல்லார்

யாவர் நம்மிடம் உளர்? நன்று, நல்லிசை மெல்லியரான நமது ஔவைப் பிராட்டியாரையே காஞ்சிக்கு அனுப்புவோம்" என்று துணிவு கொண்டான், தன் எண்ணத்தை அம்மையாருக்கு அறிவித்தனன். அம்மையாரும் அவன் கருத்திற்கு உடன்பட்டுக் காஞ்சி நகரை அடைந்தார்.

தொண்டைமான் ஔவையாரை அன்புடன் வரவேற்று, அறுசுவை யுண்டியை அன்பொடு அளித்தான். ஔவையார் கேவலம் தூதராக வந்தவரேயன்றி நல்லிசைப் புலவருமாய் விளங்கினமையால், தொண்டைமான் அவரிடத்துப் பேரன்பு கொண்டான். அவன் அம்மையாரை அழைத்துச் சென்று அரண்மனைக் காட்சியைக் காட்டினன், பின்னர், தனது படைவலியை அம்மையாருக்கு உணர்த்த விரும்பி, அவரைப் படைக்கலக் கொட்டிலுக் கழைத்துச் சென்றான். நிரை நிரையாகப் பலவகைப் போர்க்கருவிகள் வைக்கப்பட்டிருந்தன. அவை, வெகு சாக்கிரதையாகவே பாதுகாக்கப்பட்டு வந்தன. தொண்டைமான், தன்னிடத்தே படைவலி அதிகம் இருப்பதாக எண்ணி மமதை கொண்டுள்ளான் என்பதை யுணர்ந்த அம்மையார் அவனது செருக்கை யடக்க விரும்பினார், விரும்பி, அவனை நோக்கி, "வேந்தே! இக் கொட்டிலில் உள்ள ஆயுதங்கள் போர்த்தொழில் இன்மையால், பீலியணி

யப்பட்டு மாலை சூட்டப்பட்டுத் திரண்ட வலிய காம்பு அழகுறச் செய்யப்பட்டு நெய்பூசி, காவலையுடைய இவ்வாரணமனைக்கண் உள்ளன. செல்வம் உள்ள தாயின் உணவு கொடுத்தும், இல்லையாயின் தனக்கு உள்ளதனைப் பலரோடும் கூட்டுண்ணும் வறியோர்க்கு சுற்றத்தலைவனாகிய தலைமையுடைய எம் வேந்தன் அதியமானுடைய கூரிய ஆயுதங்கள் போரில் பகைவரைக் குத்துதலால் கங்கு நுனியு முரிந்து கொல்லன் வேலைசெய்யும் கொட்டிலிலே யுள்ளன" என்ற கருத்தமையப் பாடினார். இதில் அவர், அதியனை இகழ்ந்தது போலப் புகழ்ந்தும், தொண்டைமானைப் புகழ்ந்ததுபோல இகழ்ந்தும், குறிப்பால் அதியினது வீரம் தொண்டைமானது வீரத்தை விடச் சிறந்தது என்பதைத் தெரிவித்தும் நோக்கற்பாலன. இவற்றால், அமைச்சரின் சமயோசித அறிவும், தளரா மனமும், தைரியமும், அதியினிடத்துக் கொண்டிருந்த களைகடந்த அன்பும் புலப்படுகின்றன.

ஔவையார் உரைத்தவை கேட்டவன் தொண்டைமான், அவன் அவரை நோக்கி, "ஒளி தங்கிய நுதலினையுடைய விறலி! என்னோடு போர் செய்ய வல்லவர் உளரோ? நாடு பெரிய இடங்களிற் காட்டினைகளோ?" என்று வினவினன். அதுகேட்ட ஔவையார் "அரசே! நீ போர் செய்யக் கருதுவையாயின்,

எமது நாட்டின்கண்ணே அடிக்கரும்பு கோலுக்கு அஞ்சாது எதிர்மண்டும் பாம்பு போன்ற இளைய வீரரும் உளர்; அவரேயன்றி, மன்றிலார்கண் தூங்கும் பிணிப்புப் பொருந்திய முழவின் காற்றடிக் கயலால் எழும் இசையைக் கேட்டமாத்திரத்தே, அது போர்ப்பறை என்று எண்ணி மகிழும் என்னுடைய தலைவன் அதியமான் நெடுமானஞ்சியும் உளன்" என்று பெருமிதத்தோடு கூறினார்.

பின்னர், ஔவையார் அவனிடம் விடைபெற்றுத் தகடூரை யடைந்தார்; காஞ்சியில் நடந்த செய்தியை அஞ்சிக்குத் தெரிவித்து வெடுத்துக் [illegible] இருந்தனர்.

6. கோவலூர் யுத்தம்

மேற்கூறிய செய்தி நிகழ்ந்த சிறிது காலத்துக்குப் பின்னர், திருக்கோவலூரை யாண்டு வந்த 'மலையமான் திருமுடிக்காரி' யென்பான் பல சிற்றரசர்களைப் போரில் வென்று வெற்றிகொண்டு, தன்னை வெல்லவல்லார் ஒருவரும் இலர் என்று மமதைகொண்டிருந்தான். அதனை யுணர்ந்தான் நெடுமானஞ்சி, அவனது செருக்கை யடக்கவும் தனது புகழைப்பரப்பவும் விருப்பங் கொண்டான்; நால்வகைப்படைகளையும் திரட்டினன்; திரட்டி, இரைவேட்ட பெரும் புலிபோலப் பகைவன் மீது போர் செய்யச் சென்றனன்; திருக்கோவலூர் மதிலை வளைத்தான். அந் நெடுமா

னஞ்சி தன்னு மதிற்புறத்தே போர் செய்ய வந்துள்ளான் என்பதை யுணர்ந்தான் 'காரி' உணர்ந்ததும் அவன் வெந்துயரத்தை வெகுளியினால் வெய்துயிர்த்தான், "ஆ! ஆ! இந்த அஞ்சிக்கும் இவன்து தண்டினுக்கும் எளியேனோ யான்?" என்று வெகுண்டு கூறி, தடம் புயங்களைக் குலுக்கி நக்கான். பின்னும் அக் காரி, "நன்று, நன்று,

முழைக்கணிள வாளரி முகத்தெதிர் தெனக்களிறு
முட்டியெதிர் கிட்டி வருமோ?

வெகு நன்று, என்து வலியை முற்றும் உணர்ந்தும் இந்த அஞ்சியென்பவன் யாதும் அறியாத பிறர்போல என்னை எதிர்க்க வந்தது வியக்கத்தக்கதே, என்னை நினைப்பளவில் வெல்ல எளிதென்று எண்ணினன் போலும்" என்று கூறித் தன்து சேனைத் தலைவனை நோக்கி, "வேழம், இரதம், பரி, வெம்படைஞர் என்றினைய நாற் படையொடு விரைந்து சென்று அஞ்சியை அஞ்சாது எதிர்த்துச் சமர் தொடுக்குக" என்று கூறினன். பின்னர், அவனும் போர்க்கோலங் கொண்டு, தன் பரிமீதிவர்ந்து சென்று கடும்போர் புரிந்தான்.

அஞ்சியும் தனது தோள்வலியையும் வாள் வலியையும் காட்டினன். பகைவர் சேனையாகிய ஆழ்ந்த கடலிலே அஞ்சி யென்னும் மரக்கலம் ஓடிற்று. அஞ்சி பகைவீரர்களை வீழ்த்துருட்டினன், யானை

களையும் தேர்களையும் உடைய பிடித்த படைக் குழுச் சேனையைச் சின்னாபின்னமாக்கினன், தேர் மேலும், பரிமேலும், வெண்கோட்டுக் கரிமேலும், காலாட்கள் கும மேலும், அம்புகளைக் கண்டு விலகியோடாத வீரர்கள் மேலும் வெஞ்சரங்களை அதிரப் பொழிந்தான் அஞ்சியின் போர்த்திறத்தைக் கண்டு காரி பெருவியப்பெய்தினான். அவனது படை நிலை கலங்கியது, வீரர் பலர் கலங்கினர்.

இக் காட்சியினைக் கண்ட ஔவையார் ஒருபுறம் மகிழ்ச்சியையும் ஒருபுறம் வருத்தத்தையும் அடைந்தார், அஞ்சியது போர்த் திறத்தைக் கண்டு களித்தார். அஞ்சியோடு வீணே போர்செய்து, தன் படையை நாசமாக்கும் காரியின் அறியாமைக்குப் பெரிதும் மனம் வருந்தினர், அஞ்சியது ஆற்றலை அவனுக்கு எடுத்துக் கூறிப் போரை யொழித்து அஞ்சிக்கு அடங்கிப் போமாறு கூற விரும்பினார் அவர் காரியையும் அவனது படையும் நோக்கி, “எம் வேந்தன் போர் செய்தற்குப் புடைபெயர்ந்து, உலாவி, விரும்பி உறையகழித்த வாள்கள், பகைத்தோர் உடலின் தசையின் கண்ணே மூழ்கிப் பிளந்து வடுப்பட்டு வடி விழந்தன. அவன் வேல்கள், குறும்பர் சேர்ந்த அரண்களை வென்று, அப் பகைவரது நகரிய பதிகளை யுடைய நாட்டை யழித்தலால் சுரையோடு பொருந்திய கரிய காம்புடனே ஆணி கழன்று நிலை கெட்டன

அவன் களிறுகள் கைப்பட்டதால் தடுக்கப்பட்ட
கதவைப் பொருது பகைவரது அரணை யழித்தலால்
பெரிய நரந்தங்களிற் கட்டிய பூண்கள் கழன்றன
அவன் பரிகள், பாய்ந்துவந்து போர்செய்த வீரரது
பொன்னாற் செய்யப்பட்ட பசியமாலையையுடைய
மார்பு உருவழியும்படி ஓடி உழக்குதலால் இரத்தக்
கறைபட்ட குளம்புகளை யுடையவாயின. அரசிரோ,
நிலவுலகத்தைக் கண்ணுள்ளே யடக்கும் கடல் போன்ற
படையையுடையவன், பொன்னால் இயன்ற தும்பைக்
கண்ணியையுடையவன், கழல்வடிவாகவும், கிண்ணி
வடிவாகவும் செய்து செறிந்த கணைகள் தூணிக்
கேடகத்தை யுடையவன் போர்க்களத்தில் அவ
னால் வெருளப்பட்டோர் பிரஜைகள் எங்கே யுளர்?
செல்வம் மிகுந்த உங்களுடைய ஊர்கள் உங்
கட்கு உரித்தாக வேண்டுமென்று உன்னுவீராயின்,
அவனுக்குநீர் திறை கொடுக்கவேண்டும். அவ்வாறு
திறை கொடுக்க நீவிர் மறுப்பீராயின், அதற்கு அவன்
உடன்படுபவன் அல்லன். அவனது வீரத்தை யான்
எடுத்துக்கூறியும் நீவிர் தெளியீராயின், நீங்கள் உங்
கள் உரிமை மகளிரது கோலைப் பிரிந்துறைதல் வியப்
பன்று ஆகலின், அதனை யோசித்துப் போர் செய்யு
மின். இன்னும் வேண்டுமாயினும் எங்கள் மாபெரு
வேந்தனாகிய அஞ்சியின் அறநிலை அறைகுவன் கேண்
மின். ஒரே நாளில் எட்டுத் தேரைச் செய்யும் தச்சன்

ஒருமாதம் கூடிக் கருதிச் செய்யப்பட்டதோர் தேர்க் காலை யொப்பன் எங்கள் மன்னன்" என்று இவர் ருக்கு அஞ்சியின் தனிப்பட்ட ஆற்றலையும், அவன் படை வலிமையும் தெளிவுறப் பகைவர்க்கு எடுத்துக் கூறி னர்.

அம்மையார் இக்கருத்தினை எடுத்துரைக்கும் காரி, போர் செய்தலில் பெரு விருப்பங் கொண்டவனாதலின் போரை நிறுத்தாது பொருநான் மீதைப் படக்கூறியென! காரியின் படை பறிந்தது. காரியும் அஞ்சிக்கு ஆற்றாது அஞ்சியோடினான். கோவலூர், அஞ்சார் வெஞ்சமம் படைத்த அஞ்சியது ஆட்சிக்குட்பட்டது. அவன்றன் போர்த்திறத்தைக் கண்ணுற்ற பரணர் என்னும் பெரும்புலவர் அவனைப் பலவாறு புகழ்ந்து போற்றி னர். அம்மையாரும் அகமகிழ்ந்து அஞ்சியை நோக்கி, "உன்னுடைய முன்னோர்கள் தேவர்களைப் போற்றி வழிபட்டனர், அத் தேவர்களுக்கு வேள்விகளை அவி யினை அருத்துவித்தனர் அவ்வாறேல், அவர்கள் பெற தற்கரிய கரும்பை விண்ணுலகினின்றும் மண்ணுலகிற் குக் கொணர்ந்தனர், கடலுக்குட்பட்ட இவ்வுலகின் கண்ணே சக்கரத்தை நடாத்தினர். நீயோ, பொன்னாற் செய்யப்பட்ட வீரக்கழல் புனைந்த காலினையுடையை, பெரிய பனம்பூ மாலையை யணிந்துள்ளாய், பூரிநிறைந்த காலினையுடையாய், ஈரம்புலராத புலாலையுடைய நெடிய

வேலினையுடையை; பிறவேந்தரது கொடி முதலிய அடையாளங்களைப் பெற்றுள்ளாய்; நாடுகளையுடைய ஒரு நாளும் நீங்காத அரசவுரிமையைத் தப்பின்றாகப் பெற்றுள்ளனை, இவற்றுடன் அமையாது, புதிய போரை விரும்பி ஏழு அரசரோடு பகைத்து, அவருடன் போர்செய்து வெற்றி பெற்றாய், அவ்வாறு வெற்றிபெற்ற அந்த நாளினும் பாடும் புலவர்க்குப் பாட முடியாத அடங்காப் புகழையுடையவனாய், நீ மாறுபாடுமிக்க கோவலூரை யழித்த இற்றைநாளும் நின்று வலிமிக்க தோளைப் பாணன் தன் புலமைப் பெருவலியாற் பாடினன்" என்று கூறி, புலவராலும் பாடிப் புகழ முடியாத அஞ்சியது ஆற்றலையும், பகை வென்ற திறத்தையும், பாணரது கவிபாடும் ஆற்றலையும் ஒருங்கே வைத்துப் புகழ்ந்துரைத்தார்.

இவ்வாறு அஞ்சி கோவலூரை வென்று, தனது அரசாட்சிக் குட்படுத்திய பின்னர், ஔவையாருடன் மீண்டு, தனது அரசிருக்கையான தகடூரை யடைந்தான்.

7. புத்திரப் பேறு

அரசனுக்கு இருக்க வேண்டிய அருங்குணங்கள் அனைத்தினையும் பெற்ற அண்ணல் அஞ்சி, புத்திரப் பேறின்றிப் பெரிதும் வருந்தினன். குடும்பம் என்னும் மரத்திற்குக் குழந்தை கொழுங்கனியன்றோ? எந்த

லோர்க்கு ஆண்டவர்கள் இருப்பினும் குழந்தையைக் கண்ட அளவில் அவை, 'வெயிலைக் கண்ட பனிபோல்' நீங்குகின்றன. இவ்வாழ்வார்க்கு இம்மைச் செல்வங் களிற் சிறந்தது மக்கட் பேறன்றோ. அப்பேற்றினைப் பெற்றவன் இம்மை மறுமை இன்பங்களைப் பெறுகின் றன். இத்தகைய இன்பம் உயிர்கட்கெல்லாம் ஒரு தன்மையாகவே அமைந்திருக்கிறது.

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை, யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற"

என்ற நாயனார் வாக்கு நிறைவேறுவதாலும், குழந்தை யில்லா மனை பாழிடமே யாகும். குழந்தைகள் தம் சிறிய கைகளால் அளாவப்படும் சோறானது, சுவையில் தேவா மிர்தத்தைவிட மிகவும் இனிமையைப் பயப்பதாகும். தந்தை தாயார் தம் குழந்தைகளுடைய மெய்யைத் தீண்டுதலால் உடலின்பம் பெறுகிறார்கள், அவர்களு டைய மழலைச் சொற்களைக் கேட்பதால் செவியின்பம் பெறுகிறார்கள். இவ்வாறு புதல்வர் இல்லாதோர்க் குப் போக சம்பத்துடன் இருப்பினும், குடும்ப சூனியமே யாம். ஐயறிவிகளும் மக்களைப்போல் உள்ள காதலைத் துறக்க வல்லன அல்ல, எனின், அக்குழந்தைகளைப் பெறு தலால் உண்டாகும் இன்பத்தைச் சொல்லவும் வேண் டுமோ?

"படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வர் ஆயினும், இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி,

இட்டும், தொட்டும், கவ்வியும், துழந்தும்,
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்து(ம்),
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்தாம் வாழும் நாளே ''

—புறநானூறு

' பண்ணிலாப் பாடல் போலும், பரிவிலா நட்புப் போலும்,
உண்ணிலா நெய்யிலாமல் உண்டிடும் அடிசில் போலும்,
பெண்ணிலா இல்லம் போலும், பெயரிலா வாழ்க்கை போலும்,
கண்ணிலா வதனம் போலும் கான்முளை யில்லா இல்லம் ''

—மாயூரத்தலபுராணம்

இவ்வாறு, மக்கட்பேறு மிகச் சிறந்ததாக விருக்க, இப்பேற்றினை நெடுங்காலம் பெறாதிருந்த அதியமான் ஆறுதல், ஔவையார் அவனை வந்து அடைந்த பின்னர், அவனது மனைவி கருவுற்றாள். அவள் சூல் கொண்டிருக்கையில் அஞ்சி கோவலூரை எறிந்தான், வென்றி கொண்டு வேந்தன் மீண்டும் தகடூரை யடைந்தபோது அரசி ஆண்குழந்தை யொன்றினைப் பெற்றிருந்தாள். அந்தச் செய்தியைக் கேட்டான் வேந்தன்; நகரில் நுழைந்தவுடன் போர்க் கோலத்துடனே ஔவையாரொடு அந்தப்புரத்தே சென்றான்; சென்று, பிறந்திருந்த ஆண்குழந்தையைக் கண்டான்; உள்ளத்தில் ஒருவராலும் உரை செய்ய அரியதொரு பேருவகை கடல்போல் பொங்க, அகமலர் முக மலர்ந்தான் வேந்தன் ஔவையை நோக்கி, "சிறந்த

பன்னிரண்டாண்டு கப்பம் கட்டாதொழிக, எங்கும் இருநிதியை வாரி வாரி யாசகாருக்குக் கொடுக்கக, ஆலயங்களில் விழாக்கள் நடைபெறுக” என்று கூறி, மீண்டும் தன் மகனைப் புத்திர வாத்சல்யம் மிக்கவனாய் ஆர்வத்தோடு நோக்கினான் குழந்தை வெகு அழகாக விருந்தது ஒளவையார் அக் காட்சியினைக் கண்டு களித்தார். அவர் செந்தமிழ்ச்சுவை தாங்கிய தமது வாயைத் திறந்து, “கையின்கண் உள்ளது வேலே, காலின்கண் உள்ளது போர்க்கோலம் கொண்டபோது அணிந்த வீரக்கழல், உடம்பில் உள்ளது வேர்ப்பு, கழுத்தில் உள்ளது ஈரம் புலராத பசும்புண், பனந்தோட்டையும் வெட்சி மலரையும் வேங்கைப் பூவுடனே கலந்து தொடுத்து உச்சியில் சூடிய பகைவரை வெகுண்டு பார்த்தக்கண், தவப் புதல்வனைக் கண்டும் சிவப்பு நீங்கினதில்லை, ஆதலால், இவனை ஈன்றெடுத்தவர்கள் பிழைப்பதுண்டோ?” என வியந்து கூறி மகிழ்ச்சி யடைந்தார்.

குழந்தை பிறந்த செய்தி நகரமெங்கும் பரவியது. அந் நகரவாசிகள் அதனைக் கேட்ட மாத்திரத்தில் தங்கள் வயிற்றிற்றான் தனயன் பிறந்தாற் போலப் பெருமகிழ்ச்சி யடைந்தார்கள் அன்று முழுவதும் யாவரும் களிப்பென்னும் கடலில் ஆழ்ந்தார்கள், “மெய்மாரசன் நீடுவாழ்க, அவனது தோன்ற

லும் நீண்ட ஆயுளைப் பெற்று விளங்குக" என்று வாயார வாழ்த்தினார். அமைச்சர் சுற்றத்தோடும் கணிக ளும் கலந்து நகரத்தார்க்கு வழங்கினார். அன்று நல்ல முகூர்த்தத்தில் அறிவோர் குழந்தைக்குப் 'பொருட் டெழினி' என்ற நற்பெயரை இட்டார்கள். அரச னும் அடங்கா மகிழ்வு கொண்டான்.

8 மாபெரும்போர்

அஞ்சிக்கு அஞ்சிப் புறங்கொடுத்து ஓடிய 'காரி' என்பவன் தன் நண்பன் 'சேரமான் பெருஞ்சேர லிரும்பொறை' என்பானோடு சேர்ந்து ஒரு பெரிய சேனையுடன் அஞ்சியை எதிர்க்கத் துணிந்தான். அவ் வமயம் சேரமான் கொல்லிமலைநாட்டை யாண்டு வந்த 'ஓரி' என்பானை முதலில் வெல்ல நினைத் தான். அதனையுணர்ந்த ஓரி, தன் நண்பனான அஞ் சியைத் தனக்கு உதவிபுரிய வேண்டினான். அஞ்சியும் அதற்கு உடன்பட்டு, சோழபாண்டிய மன்னரையும் உடனழைத்துச் சென்று சேரமானைத் தாக்கினான். கொடும்போர் நிகழ்ந்தது. முடியுடை மூவேந்தரும் மூன்று குறுநில மன்னரும் அப் போரில் ஈடுபட் டிருந்ததால், சாதாரணப் போராயிராது, அஃது மாபெரும் போராகவே யிருந்தது.

முடிவில் சேரமான் அஞ்சியையும் இரு பெரு வேந்தரையும் ஒருங்கே வென்றான். சோழபாண்டியர் தத்தம் நாடுநோக்கி ஓடலாயினர். அஞ்சி, சேரமா

னுக்கு அஞ்சித் தகடூர்க் கோட்டைக்குள் புகுந்து கொண்டான். சேரமானும் அவனை விடாது, பின் பற்றிச் சென்று தகடூரை முற்றுகை யிட்டான். அஞ்சாத நெஞ்சம் படைத்த அஞ்சி எக்காரணத்தாலோ சேரமானை எதிர்க்கத் தயங்கினன். அதுகண்ட ஔவையார் அவனுக்குப் போரில் உற்சாகம் உண்டாக்க எண்ணினார். அவர் அவனை நோக்கி, "வேந்தே! மலைச் சாரலில் உறையும் வலிமையுள்ள புலி சீறினால், எதிர்த்து நிற்கவல்ல மானினம் உளவோ? ஞாயிறு கொதித்து எழுந்தால் மயங்கி வானிடத்தும் திசையின் கண்ணும் செறிந்த இருள் உண்டோ? பாரத்தின் மிகுதியால் நிலத்திற் பதிந்த சகடத்தின் ஆழ்ச்சியைப் போக்க மணற் பரக்கவும், கற்பிளக்கவும் நடக்கவல்ல மாச் செருக்குடைய கடாவிற்குச் செல்லற்கரிய துறையும் உண்டோ? அவை போல, நீ அமர்க்களம் புகுந்தால் இம் மண்ணுலகில் உனது நாட்டைக் கைப்பற்றி ஆரவாரிக்கும் வீரரும் உளரோ?" என்று கூறினர்.

அம்மையின் மொழி வேதவாக்கிய மென்று கருதும் மனப்பான்மை யுடைய அஞ்சி அவர் உரைத்தவைகேட்டு, மனத்தெளிவும் உற்சாகமும் கொண்டு போருக் கெழுந்தான்; பகைவனது சேனையைச் சின்னபின்னப் படுத்தினன். சேரமானது குதிரை வீரர்களிற் பலர் உயிர் தப்பினாற் போதும் என்று ஓட

டம் பிடித்தனர். அஞ்சியின் சேனையும் சோர்வால் அலைக்கழிக்கப் பட்டது. அஞ்சி, சிறிது நேரம் கடும் போர் புரிந்தான்; முடிவில் பகைவர் படைகளால் புண் பட்டான்.

தம் வேந்தர் பெருமான் போர்க் களத்தில் புண் பட்டு வருந்தி இறுதிலைக் கண்டார் ஔவையார். அவர் அவன் முன் சென்று அவனை நோக்கி, "பெரிய தகைமையை யுடையாய்! நீ சிறிய புண்பட்டபடியால் உன்னால் பலர் மாண்டனர். இணையிய பிணிப்பை யுடைய முரசம் இழுமென்னும் ஓசையை யுடையதாய் ஒலிக்க, மேற் சென்று போரை வெல்லுதல் இனி எங்கே யுளது?" என்று அவனது போர்த் திறத்தைக் கொண்டாடினர். அது கேட்ட அஞ்சி மகிழ்வெய்தி, பின்னும் போரை விரும்பியவனாய்ப் பகைவரை எதிர்த்தான். அவ்வமயம் சேரமான் விடுத்த படை யொன்று அஞ்சியின் மார்பிற் பாய்ந்தது. அந்தோ! இரவலர்க்கு வரம்பின்றி அளித்து வந்தவனும், வீரலட்சுமி தங்கப் பெற்ற தோள்களை யுடையவனும், நற்குண நல்லொழுக்கம் வாய்ந்தவனும், ஔவையாரது ஆருயிர்த் துணைவனுமான அதியமான் நெடுமானஞ்சி மண்ணுலக வாழ்வை நீத்து, விண்ணுலக வாழ்வை எய்தினன்.

9. அவ்வையார் புலம்பல்

அஞ்சி இறந்து பட்டதைக் கண்ட ஔவையார் ஆற்றொணாத் துயர் அடைந்தார், அவனது அரும

பெருங் குணங்களைக் கூறிய புலமையினர் "எம் வேந்தன் சிறிது மதுவைப் பெறினும், எங்கட்குக் கொடுக்காது உண்ணான், இப்போது அவ்வாறு எங்கட்குக் கொடுப்பது கழிந்ததே, பெரிய அளவினை யுடைய மதுவைப் பெறின், அதனை எங்களுக்குக் கொடுப்பான், யாங்கள் உண்டபின்னர் எஞ்சியதையே அருந்து வான், அது கழிந்ததே, சோறு சிற்றளவினை யுடைய தாயினும் பல கலங்களில் வைத்துப் பலரோடும் உண்பன், அது கழிந்தது, மிக்க அளவினை யுடைய சோற்றின் கண்ணும் வெகு பேரோடு உண்பன், அது கழிந்தது, என்போடு கூடிய ஊன்றடி யுள்ள இடம் முழுவதும் யாங்கள் உண்டு களிக்க எங்களுக்கு அளிப்பன், அது கழிந்தது, எங்களுக்கு மாலை சூட்டும்போது புலால் நாறும் எங்கள் தலையைத் தான் கொண்ட அன்புப் பெருக்க மணநாறும் தனது கையால் தடவுவான், அது கழிந்தது, அஞ்சியது மார்பகத்தே தைத்தவேல் அவனது மார்பினில் மாத்திரம் தைக்கத் தவில்லை, அது அரிய தலைமையை யுடைய பாணரது மண்டையின் துளையில் உருவியும், அவரால் காப்பாற்றப்படும் சுற்றத்தாரது விழிப்பாவையை மழுங்கச் செய்தும், அழகிய சொல்லை ஆராயும் நுண்ணிய ஆராய்ச்சியாளரது நாவின்கண் வீழ்ந்தும் சென்றது. எமக்குப் பற்றாகிய எம் இறைவன் எங்குள்ளானோ? இனிப் பாடுவோரும் இல்லை பாடுவோர்க்கு ஒன்று ஈவாரும் இல்லை குளிர்ந்த நீர்த் துறையில் பூக்கும் பகன்றைப் பூ பிறரால் சூடப்படா

தது போல், பிறர்க்கு ஒரு பொருளைக் கொடாமல் இறக்கும் உயிர்கள் மிகப்பல" என்று கூறிப் புலம்பினார். பின்னும், அவ்வம்மையார் அவன் இறந்ததற்கு ஆற்றாது புலம்புபவராய், "அஞ்சி யின்றிக் கழிகின்ற காலையும் மாலையும் இனி இல்லாது போகக் கடவன; யான் உயிர் வாழும் நாளும் எனக்கு இனிப் பயன் படாமையால், அது இல்லா தொழியட்டும்" என்று கூறிப் புலம்பினார்.

பின்னர், அதியமானது உடல் எரிக்கப்பட்டது. அவ்வமயம் ஔவையார், "ஈமத்தீ, எம் வேந்தனது பூத உடலைச் சிதைக்காமல் அவியினும் அவிக; அல்லாமல் சிதையும்படி ஓங்கி எரியினும் எரிக; ஆனால் கதிரவனை ஒப்பான புகழ் உடம்பு ஒரு காலத்தும் அழியாது" என்று, அஞ்சியினது புகழை மேம்படுத்திக் கூறி வியந்தார்.

10. பொகுட்டெழினி பட்டம் ஏற்றது

ஔவையார் முதலிய பெரியோர்கள் அஞ்சியது மகனான பொகுட்டெழினிக்கு முடிசூட்ட ஓர் நன்னாளைக் குறிப்பிட்டனர். குறித்த தினத்தில் தகடூரை நன்றாக அலங்கரித்தனர். வீதிகளில் பூரண கும்பங்களும் பொற்பாலிகைகளும் பாவை விளக்குகளும் வைத்தார்கள்; குலைக்கமுகும் குலைவாழையும் கரும்பும் வஞ்சிக்கொடியும் பூங்கொடியும் ஆகிய இவற்றைக்

கட்டவேண்டிய விடங்களிற் கட்டினார்கள், தூண்களில் முத்து மாலைகளைக் கட்டினார்கள், வீதிகளிலும் மனைகளிலும் பழைய மணலை மாற்றிப் புது மணலைப் பரப்பினார்கள்; ஆகிற கொடிகளை மாடங்களிலும் வாயில்களிலும் கட்டினார்கள், தெய்வங்கள் உறையும் கோவில்களிற் செய்யவேண்டிய காரியங்களை ஏற்பச் செய்தார்கள்.

குறித்த நல்வேளையில் பெரியோர் பொற்குடுமியை மங்கள நீரில் நீராட்டினர்; அரசன் அணிய வேண்டிய ஆடை யாபரணங்களை அணிவித்தனர், பூமாலைகளைப் புனைந்தனர், கலவைச் சாந்துகளைப் பூசினர், இவ்வாறு அரச கோலத்தோடு விளங்கிய பொற்குடுமி அரச மண்டபத்தை யடைந்தான்.

பின்னர், செய்யவேண்டிய சடங்குகள் முறையே செய்யப் பட்டன ஔவையார் முதலிய பெரியோர் மணிகள் பதித்த முடியை எடுத்து வாழ்த்தி, பொற்குடுமியின் முடிமீது வைத்து ஆசீர் வதித்தனர் பல்லிசை வாத்தியங்கள் முழங்கின. நான்மறைக் கிழவர் ஆசி கூறத்தனர் பொற்குடுமி செங்கோலைக் கையில் ஏந்தினன்

அவ்வமயம் ஔவையார், பொற்குடுமியால் குடிகள் சமாதானத்தையும் களிப்பையும் அடைவார்

கள் என்ற கருத்தை வைத்து, அரசனை நோக்கி, "உயர்ந்தோய்! நீ, திங்களாகிய நாள் நிறைந்த மதியை யொப்பாய். ஆதலின், நின் நிழற்கண் வாழும் குடிகட்குத் துன்பமாகிய இருள் எவ்விடத்துள்ளது?" என்று அவனது நற்குண நற்செயல்களைக் குறிப்பாக வெளிப்படுத்திப் புகழ்ந்தார்.

பெரியோர் ஆசியாலும், இறைவன் இன்னருளாலும் பொகுட்டெழினி நற்குண நற்செயல்களை யுடையவனாய் வறியோர்க்கு வழங்கிச் செங்கோல் மன்னனாய் அரசாண்டிருந்தான்.

IV. வள்ளல்—குமணன்

IV. வள்ளல்—குமணன்

1 குமணன்

கொங்குமண்டலம் என்பது தமிழ் நாட்டில் உள்ள மண்டலங்களில் ஒன்று. அது சேலம், கோயமுத்தூர் நீலகிரி ஜில்லாக்களைச் சேர்ந்த நாடாகும். கோயமுத்தூரைச் சேர்ந்த உடுமலைப்பேட்டைத் தாலுகாவில் 'குதிரை மலை' என்னும் ஒரு மலை உள்ளது. அதனருகில் 'குழுமம்' என்று ஓர் ஊர் உண்டு. இம் மலை சுமார் ஆயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முன்னர் 'முதிர மலை' என்ற பெயர் பெற்றிருந்தது. குழுமம் என்னும் பதி, 'குழுமூர்' என்ற பெயருடன் இருந்தது. இக் குழுமூரும் அதனைச் சார்ந்துள்ள முதிரமலையும் சில அரசரால் ஆளப்பட்டு வந்தனவாகச் சங்க நூல்களால் தெரிகிறது. வருடங்கள் ஆக ஆக, ஊர்களின் பண்டைப் பெயர்கள் மாறுதல் இயல்பே யாதலால் 'முதிர மலை' 'குதிரை மலை' எனவும் 'குழுமூர்' என்பது 'குழுமம்' என்றும் வழங்கப்படுகின்றன என்பதில் ஐயம் ஒன்றுமில்லை.

"அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது"

கொடுத்த சேரமான் பெருஞ் சோற்று உதியன் சேரலாதன் இந் நாட்டை ஆண்டு வந்ததாகத் தெரிகிறது.

> "பல்லான் குன்றிற் படுநிழற் சேர்ந்த
> நல்லான் பரப்பிற் குழுமூர் ஆங்கண்
> கொடைக்கடன் என்ற கோடா நெஞ்சின்
> உதியன்" —அகநானூறு

அங்ஙனம் உயர்சிறப்புற்ற சேரன் உதியன் ஆண்டிருந்த நாட்டை, அவனுக்கு அநேக ஆண்டுகட்குப் பின்னர், இற்றைக்குச் சற்றேறக் குறைய ஆயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முன்னர், 'குமணன்' என்னும் மன்னவன் ஆண்டுவந்தான்.

இம் மன்னன், வரையாது கொடுக்கும் வள்ளற் றன்மையிற் சிறந்தவனென்றே கூறுதல் அமையும், தமிழருமையினையும் புலவர் பெருமையினையும் நன்குணர்ந்து பரிசில் நல்கும் பான்மையுடையன்.

2. பெருஞ் சித்திரனார்

புகழ் மணம் பெற்ற குமணன் கொங்குநாட்டில் முதிரமலை நாட்டை யாண்டு வருகையில், சோழ நாட்டில் 'பெருஞ் சித்திரனார்' என்னும் பெயர் வாய்ந்த நல்லிசைப் புலவர் ஒருவர் இருந்தார். இயற்கையில் அன்னவர் இப்பெயர் பெற்றனரோ அன்றி, செயற்கையில் வந்த பெயரோ அறியோம். உலகத்து இயற்

கைப் பொருள்களைத் தம் கண் முதலான புலன் அறிவுகொண்டு பலதிறப்பட்ட வண்ணங்கள் கலந்து தூரிகையால் படத்தில் பன்னுறுநய வருந்தி ஓர் ஓவியத்தைத் தீட்டும் சித்திரக் காரியைப்போன்று, உலகில் தோன்றும் மலை, கடல் முதலிய பெருந் தோற்றமுதற்கொண்டு அணுவளவான சிறு தோற்ற மீறுக உள்ள எல்லாவற்றையும், தமது மன அறிவைக் கருவியாகக் கொண்டு, ஆராய்ந்து உள்ளமாகிய படத்தில் தீட்டி, சய்யங் கிடைக்கப்போது அக்காட்சியிலே தோய்ந்து கிடந்த உணர்ச்சியை வடிவமாக்கி, குற்றமிழை நல்முறைப் பயின்ற நாவால் பைந் தமிழ்ப்பாவாகப் பாடுவதில் மிகச் சமர்த்தரானது பற்றியே, இப்புலவர் பெருமானுக்கு இப்பெயர் வந்ததோ என எண்ணவேண்டியிருக்கின்றது

இவர், இளமைப் பருவத்திலேயே ஓர் நல்லாசிரியனையடுத்து கலமுறைப் பயின்றவர், முருகு விரிந் கொளிரும் தமிழ் மலரைத் தம் அகத்தே வைத்தவர், சொற்சுவை பொருட்சுவையோடு கவிபாடும் போற்றல் பெற்றவர் இப் பெருமான் தம் முதிய தாயுடனும் மனைவியுடனும் வாழ்ந்து வந்தார் நாளடைவில் புலவர்க்குப் பல மக்கள் உண்டாயினர் மக்கட்பேற்றினைப் பெற்ற புலவர் பொருட்பேற்றினைப் பெற்றிலரே இது உலக இயற்கையே அன்றோ? மலர்வனம், மலைபிட்ட செல்வத்தாருக்கு மகிழ் ஓர் மகவும் தாரான்,

ஆனால், குடிக்கக் கூழ் இல்லாததுக் குறைவின்றி மக்களைத் தருவான புலவர் நாளடைவில் வறுமை நோயால் வாடத் தலைப்பட்டனர்.

கல்வியறிவு பெற்ற மக்கள் பொருள் இன்றி வாடலும், அது பெறாத மக்கள் பொருள் பெற்று வாழ்தலும் கண்கூடாகக் காண்கின்றோம். கல்விக்குத் தலைவி கலைமகள் ஆவள்; பொருட்குத் தலைவி அலைமகள் ஆவள். கலைமகள் அலைமகட்கு 'மருகி' யாகின்றாள். ஓர் குடும்பத்தில் மாமியும் மருகியும் ஒன்றுபட்டு வாழ்தல் அரிதன்றோ? அலைமகள் ஒருவனைப் பற்றியிருந்தால், அவனிடத்துக் கலைமகள் நெருங்குவதைக் காணோம். ஆனால், அரிதாக இவ்விரு மகளிரும் சிலரிடத்தே ஒன்றி வாழ்கின்றார்கள். மாமியும் மருகியும் மனம் ஒன்றுபட்டு வாழ்கின்ற சில குடும்பங்களை நாமும் கண்கூடாகப் பார்க்கின்றோம் அன்றோ? இக்காரணத்தாலோ, அன்றி எக்காரணத்தாலோ, புலவரிடம் அலைமகள் அண்டவில்லை.

புலவரது குழந்தைகள் பசியால் பெருந்துயர் உழன்றனர். சிறிதளவு சோறு சமைத்தால், அது, பிள்ளைகட்கே போதவில்லை.

இங்ஙனம், பிள்ளைகள் படும் பாட்டைக் கண்டு சகியாத புலவரது மனைவி தன் கணவனைத் தயா நீர் விழியால் நோக்கப் புலவர் வானத்தை நோக்குவார்.

ஒரு நாள் புலவர் பெருந்தகை ஓர் இடத்தமர்ந்து சிந்திக்கலானார், "என்னே நமது வாழ்வின் பயன் இருந்தவாறு! நாம் யாரிடம் சென்று பொருள் கேட்பது? உலகில் செல்வராயினோர் பலர் உளர் என்றாலும், அவர் யாவரும் அறிவுடைச் செல்வர் களோ! அறிவுடை மக்களிடத்தே சென்றாலன்றோ அவர் நமது பெருமையையும் வறுமையையும் நன்கு உணர்ந்து பரிசில் நல்கத் தக்கவர். புலவறிவாளர் செல்வரோ யாயினும் நாம் பெரும் பயன் என்?

"செல்வம் வந்துற்ற காலைத் தெய்வமுஞ் சிறிது பேணார்
சொல்வன அறிந்து சொல்லார் சுற்றமுந் துணையும் நோக்கார்
வெல்வதே நினைவதல்லால் வெம்பகை கடிதென் றெண்ணார்
வல்வினை விளைவும் ஓரார் மண்ணின்மேல் வாழு மாந்தர்"

—வில்லிபாரதம்

திருவாசகத்தும் தீந்தமிழாலாகிய தேனினும் இனிய பாக்களை, தமிழின் அருமையையும் புலவரது பெருமையையும் கணித்தறியவல்ல போற்றல் வாய்ந்த வள்ளல்களிடத்தன்றோ பாடவேண்டும். அவர்களிடம் சென்றால் நம்மைப் பிணிக்கும் வருத்தும் வறுமையும் நீங்கும். அவ்வாறு செல்வோம் என்றாலும், கொடையிற் சிறந்த வள்ளல்கள் காலமாயினரே! என் செய்வோம்? ஆ! நல்ல யோசனை! தற்போது யாவரும் சிறப்பித்துக் கூறும் தகடூர் மன்னன் 'அதிக

மான நெடுமானஞ்சியிடம் செல்வேன். அவனே நமது வறுமையை யகற்றும் பெருமை வாய்ந்தவன்" என்று துணிந்துகொண்டு, பல நாடுகளைக் கடந்து வருந்தி, முடிவில் புலவர் தகடூரை யடைந்தார்.

எக்காரணத்தாலோ, நெடுமானஞ்சி புலவரைக் கண்டு வரவேற்கவில்லை; ஒரு நாள் தன் ஏவலர் மூலமாகப் புலவர்க்குப் பரிசில் அனுப்பினான். புலவர் அவற்றைப் பெற மறுத்து, முனிவுடன் அவனூரை விட்டு அகன்றார். அகன்றவர், கொங்குநாட்டில் உள்ள குமணன் வள்ளன்மையிற் சிறந்தவன் என்பதைக் கேள்வியுற்று, குமுழூரை யடைந்தார்.

3. புலவரும் குமணனும்

குமணமன்னவன் பெருஞ் சித்திரனாரை முகமன் கூறி வரவேற்றான். குமணனின் எளிய தன்மையையும் புலவரை உபசரிக்கும் புனிதத் தன்மையுங் கண்டு பெருஞ் சித்திரனார், உள்ளத்தில் ஒருவராலும் கரைசெய்ய அரியதொரு பேருவகை கடல்போலப் பொங்க, குமணனை நோக்கி, "மன்னவனே! என்னைப் போன்ற இரவலர்க்குத் தாய்வீடுபோன்ற நின்னது முதிரமலையும், தாயை யொப்ப அன்பினைச்செலுத்தும் காருண்ய வள்ளலான நீயும் இருக்க எமக்கென்ன குறை! நீ, சுகமேவாழ்க் கடவாய்!" என்று புகழ்ந்து ஆசீர்வதித்தார்.

பின்னர், குமணன் புலவர்க்கு அறுசுவை உண்டி அன்புட னளித்தான். புலவர் பைந்தமிழ்ப் புலமையையும் அவர்தம் நற்குணங்களையும் கண்டு வியந்து, அவருக்குப் பரிசிலளிப்பின் தம்மைவிட்டு நீங்குவரென நினைத்தாய பல்நாள் பரிசில் நல்காதிருந்தனன். புலவரோ, தாம் குமணனது மாளிகையில் சுகமாயிருக்க, தம் தாயும் மனைவி மக்களும் எப்பாடு படுகின்றார்களோ என்று ஏக்கமே பெரிதுங் கொண்டார். ஆதலால் விரைந்து ஊர் செல்ல விருப்பங்கொண்ட புலவர் தன்னுள்ளத் தன்மையைக் குமணனுக்குக் குறிப்பாகத் தெரிவிக்க நினைக்கார். அவர் குமணனை நோக்கி, "முரசு அறையவும் வெள்ளிய சங்கு முழங்கவும் வேந்தரோடு போர் செய்தவனும், நெடிய மலைகளை ஒலிக்கும் வெள்ளிய அருவி கல்லை உருட்டிப் போகும் பறம்பு நாட்டிற்கு வேந்தனாகியவனும் ஆன 'பாரி வேள்' மாண்டனன். உயர்ந்த உச்சியையுடைய கொல்லி மலைக்குத் தலைவனான 'ஓரிவேள்' உயிர் நீத்தனன். காரி என்னும் பெயருடைய குதிரையைச் செலுத்திய பெரியபோரை வென்றவனும் மாரிபோலும் வண்மையையும் மிக்க போரினையும் உடையவனும் ஆன 'மலையன்' மண்ணுலக வாழ்வை விட்டான். செலுத்தப்படாது உயர்ந்த குதிரை யென்னும் மலையையும், கூரிய வேலையும், கூவிளங்கண்ணியையும் வளைந்த ஆரத்தையும் உடைய 'எழினி' விண்ணுலகிற் கெழுந்தனன். மிக்க குளிர்ந்த மலையினைக் களைய இருள் செறிந்த

பெரிய முறைமையினையும் மலைதற்கு அரிய வலியினையும் பெற்ற பெரியமலை நாட்டுள் ‘பேயன்’ வானவர் உலகிற் புக்கன்ன திருந்திய சொல்லினையுடைய மோசியாரால் பாடப்பெற்ற ‘வேள்-ஆய்’ அண்டிரனார் ஆண்டவர் காலை. ஆசையுற்றுத் தன்னை நினைத்து வருவோரது வறுமையைப் போக்கவல்ல கையையுடைய ‘கன்னி’ என்பான் ஊனுடம்பை நீத்துப் புகழுடம்பெய்தினன்.

இவ்வாறாக வள்ளல்கள் இறந்து பட்டனர். அவர்கட்குப் பின்னர், கண்டார்க்கு இரக்கம் வரப் பாடிவரும் புலவர்க்குப் பரிசில் நல்க யாவர் ஒருவர் உளர் என்பதாக நீ இருப்பதால், நின்பால் பரிசில் பெற வந்தேன் குமணா! உன்றன் மலையில் வானளாவிய மூங்கில் மரங்கள் அதிகமாக உண்டு. அதே மலையில் சுரபுன்னை மரங்களும் அதிகம். அவற்றுடன் பல மரங்களும் ஓங்கி வளர்கின்றன. குரங்குகள் நினது மலையில் அதிகமாக வாழ்கின்றன. பலாப் பழங்களைப் பறித்துக் கடுவன், பஞ்சுபோன்ற மயிரையுடைய தலையைப் பெற்ற மந்திகளைக் கையால் குறி செய்து அழைக்கும் பான்மையுடையது. புது வருவாய் இடையறாது வரும் நல்ல நாட்டினையும் பெற்றுள்ளாய் முதிரமலைக்குத் தலைவ! உலக முழுவதும் விளங்குகின்ற புகழினையும், அழகுடன் அமைக்கப்பெற்ற தேரினை உடைய வள்ளால்! நீ எடுக்கப்பட்ட வேல் புகழ் மேம்பட வன்மையுடனே பகைவரிடத்து உலாக” என்று கூறினார்.

புலவர் மீண்டும் குமணனை நோக்கி, "கூர்வேலேந்திய குமண! வெற்றிப் புகழ் கொண்ட வசையில்லாத சிறந்த குடியில் பிறந்து இசையுடன் விளங்கும் எந்தலை! நின்னைப் பாடிய யான், நீ களிப்பின்றிக் கொடுப்பு கையுடைய களிற்றைத் தரினும் வேண்டேன். நீ மனம் உவந்து சிறிது பொருளைத் தரினும் அதைப் பெரிதாக எண்ணி மகிழ்வேன்" என்று கூறிய பாவி மக்கள் இவர்கள் படும் துன்பங்களைச் சற்றே கூறுவோம் கேட்பாயாக என்று அன்னை பெரிதும் வயது முதிர்ந்தவளாதலால் இன்னும் நல்லுயிர் போகவில்லை என்று சொல்லிக்கொண்டு வாழும் நாட்களோடு பலவாறு வெறுத்துத் தான் மிக்க ஊன்றுகோலையே காலாகக் கொண்டு, நடக்கவும் சக்தியற்று நரைமயிர் உடையவளாயும் கண்கெட்டவளாயும் உணவில்லாதவளாயும் வருந்திக்கொண்டிருக்கின்றாள் என் மனைவியோ, பசந்த மேனி உடையவள் வறுமையால் பெரிதும் மெலிந்துள்ளாளாதலால் பால் அற்ற தனங்களை உடையவள், மேலும் குழந்தைகள் வருந்திய அழுகுரல்களை பொல்வதால் வாடி பொறுக்க மாட்டாது வருந்துகின்றாள் உணவிற்கு வழியின்றி, குப்பையில் காழுக முளைத்த கீரையின் முனை கொய்யப்பட்ட கண்ணிலே கிள்ளக முளைத்த தளிரைப் பறித்து உப்பின்றியே நீரை உலையாகக் கொண்டு அடுப்பில் ஏற்றிக் காய்ச்சி, மோர் இல்லாமலும் சோறு இல்லாமலும் வெறுங் கீரையையே உண்டு உயிர் வாழ்கின்றாள். மாசு

படிந்த கிழிபட்ட கந்தைகளை உடுத்தியுள்ளனர். இத்தகைய நிலையில் உள்ள அவரும், குழந்தைகளும், என் அன்னையும், என் சுற்றமும் மனம் மகிழ்ந்து நினைவு வாழ்ந்தபடி எனக்கு நீ மனம் உவந்து பரிசில் தந்து அனுப்புவையாயின் நான் நீ மனமகிழ்ந்து தரும் பரிசிலையே யான் விரும்புகின்றேன்" என்று, தன்னெஞ்சமும் கரையும்படி வெகு அழகாகத் தம் வறுமையை வரைந்தார்.

பின்னரும், அப்புலவர் சோமான் வள்ளலை நோக்கி, "கதிரவன் வெப்பத்தால் கரிந்த புல்லையுடைய காடு துளிக்கும்படி மழைத் துளியைப் பொழிதல் போல், புலவர்களது பசியால் வாடும் உடம்பும் குடரும் குளிரும்படி, பொன் வட்டில்களில் சோற்றையுடைய கொழுவிய துவையலுடன் நறுநெய் யடிசிலை யிட்டு ஊட்டி, 'புலவர்கள் கேடின்றி வாழ்வார்களாக' என்று வாழ்த்தி, அவர்கள் மனம் மகிழும்படி, பொன் அணிகளை ஒப்பாது கொடுத்துத் தன்னைப் பிரிவித்துச் செய்யும் அன்பினும் பன்மடங்கு அதிகமான அன்பினை எங்கள்பால் செலுத்தினோர் முதிரமலைக் கிழவனாய குமணவள்ளல் என்று பலரும் சொல்ல, அதுகேட்ட யான் விரைவுடன் நின்பால் வந்தேன். என் மனையில் உண்ணப்படும் பொருள் ஒன்றும் இல்லையாயின், அறப் பசி முதுமையுடைய எனது புதல்வன் பாலில்லாத வற்றிய தனங்களை

பல் முறையும் சுவைத்துப் பால்பெறாது அழுகின்றான், பின்னர், கூழையும் சோற்றையும் வேண்டி விரைந்து உள்ளே சென்று, ஒன்றும் இல்லாத பட்பாண்டங்களைத் திறந்து திறந்து பார்த்துச் சலிப்பினால் அழுவான்; அவனைப் பார்த்து அவன் அன்னை, 'புலி வருகிறது' என்று அவனுக்கு அச்சத்தை யுண்டாக்கி அவனது அழுகையைப் போக்க முயல்வாள். சிறுவன் தணியாததைக் கண்டு மனம் வருந்தியவளாய் அவனை நோக்கி, 'மைந்த! நின் பிதாவை நினைந்து, வெறுக்க நின் மனநிலை காட்டுக' என்று கூறுவள். இங்ஙனம் வருந்தும் என் மனைவியும் மக்களும் மகிழுமாறு பரிசில் தந்து விரைவுடன் என்னைப் போக விடுவாய்" என்றார்.

மேலும், புலவர் சிகாமணி முதிரமலைத் தலைவனை நோக்கி, "வென்றி மிக்கோய்! கடல் குறையும்படி நீரை முகந்து சூல்கொண்டு, வேண்டும் இடங்களில் பெய்யும் மழை நீங்கிய கோடைகாலத்தில், உலகத்து உயிர்கள் எல்லாம் சென்று உண்ணுதற்குக் கங்கை யாற்றின் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுதல் போல, எங்கட்கும் பிறர்க்கும் உபகாரத் தலைவனாய்த் தோன்றி விளங்குகின்றனை. ஆதலால் வழிப்பறிப்போர் இரவலரை அடித்துத் துன்புறுத்திச் செல்லா வண்ணமும், அக் கொடியவரிடம் இருந்து தப்பித்துக்கொண்டோடவும் தக்கதாக நீ எனக்குக் கொம்புகளையுடைய

யானையொன்றைத் தருவாயாக நின்னால் கொடுக்கப் படும் பொருளைக் கண்டு அவர்கள் களிப்புற்றுத் தம் வறுமையைத் தொலைக்கத் தக்க பரிசில் நல்குவாய் பனை போன்ற கையையும், விளங்கும் முகிழ்த்த தந்தங் களையும் உடைய யானையை யான் விரும்புகின்றேன், அதன் மீதமர்ந்து, அதன் நெற்றிப் பட்டம் விளங்க வும், பக்க மணிகள் மாறி மாறி ஒலிக்கவும், தலைமை தோன்ற அரசு யானைமீது செல்ல விரும்புகின்றேன், குமண வள்ளலே! என் வறுமை பின்னே நின்று துரத்த உன் புகழ் முன்னே நின்று ஈர்த்துக் கொண்டுவர வந்தேன், வந்து, உனது பெருமையினைக் குறித்துப் பாடிய எனது பைந்தமிழ்ப் பாக்களை ஏற்றுக் கொள்வாயாக, எனது திறனையும் உனது தகுதியினை யும் அளந்து அவற்றிற்குத் தக்கவாறு பரிசில் அளிப் பாயாக, பெருமானே! எந்நாளும் எனது தகுதியைக் கண்டு, அரசர் நாணும்படி இவண் விட்டுப் பெயர்ந்து போவேன், உன் வாட்போரின் முயற்சியையும் ஈர மிக்க செல்வத்தையும் படையையும் பலவாறு புகழ்வே மாக" என்று வள்ளலின் பெருங் கொடைத் திறம் முதலியவற்றைத் தீங்கவியால் புகழ்ந்து பாடி வாழ்த்தி, தாம் களிறு பெற விரும்புவதையும் குறிப் பிட்டார்

புலவர் பெருந்தகை பெருமையோடும் பொறுமை யோடும் பகர்ந்தன வெல்லாம் நன்குக் கேட்ட கும

ணன்; அவர்பால் பெரிதும் இரக்கமும் அன்பும் கொண்டனன், வீட்டில் அவரில்லாதபோது நிகழும் சம்பவங்களை அகத்தாற் சித்திரித்துக் கூறும் பான்மைக்கே பெரிதும் மகிழ்ந்தான். அரசன் உடனே தன் ஆசனத்தினின்றும் எழுந்து, புலவர்க்கு வேண்டிய வரையில் பட்டாடைகளையும், பொன்னையும், மணிகளையும், முதிர்மணி விளைபொருள்களையும், சிறந்த களிற்றினையும் அவர் மனம் மகிழும்படி தந்தான். குமணனது கொடைத் திறத்தைக் கண்ட சித்திரனார் சித்திரப் பதுமை போல அசைவற்று நின்றார், அவன் தந்த பொருள்களை விருப்புடன் ஏற்று, அகம் களிக்கவும் முகம் மலரவும், உடம்பு பூரிக்கவும், குமணனைப் பலவாறு வாழ்த்தி, அவனிடம் விடைபெற்றுத் தம் ஊரை நோக்கி நடக்கலானார்

4 குமணன் காட்டிற்புகுதல்

பெருஞ் சித்திரனார் குமணனிடம் பரிசில் பெற்றுச் சென்ற பின்னர், நாட்டில் பெருங் குழப்பம் உண்டாயது. குமணனுக்கு ‘இளங்குமணன்’ என்று ஒரு பின்னோன் இருந்தான். அவன் கல்வி யறிவற்ற மூடன், கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்னத் தன் மனம்போனவாறு நடப்பவன். அவன், தன் முன்னோன் வருவோர்க்கெல்லாம் வரையாது கொடுப்பதைக் கண்டு வருந்தினான், “தன்னிடம் உள்ள பொருள்களனைத்தையும் வறியவர்க்கே வழங்

கிய பின்னர், துன்பம் அடைபவன் இவனேயன்றோ! இவனுக்குப் பின்னர்ப் பட்டமேற்பவன் யான் அன்றோ? இவன் இறக்குந் தறுவாயில் அரசாங்கத்தில் பொருள் இன்றியிருந்தால், வருந்துபவன் யான் அல்லவோ? எதிர்காலத்தைக் கருதி எதையும் இக்குமணன் செய்பவனாகக் காணவில்லையே! நானாயினும் அவனிடம் சொல்லிப் பார்ப்போம்" என்று எண்ணினான்.

அவன், தான் எண்ணியதைத் தன் தமையனிடம் கூறினான். கருமத்துணை வள்ளலான குமணனோ அவனது புன் சொல்லைக் கேட்பவன்? தனது இயல்பான குணத்துடனே குமணன் நடந்து வந்தான். அதைக் கண்ட இளங்குமணன் அண்ணன் மீது வெறுப்புற்றான், அவனைக் கொன்றுவிடுவதே சரி என்றும் தீர்மானித்தான். அம் முடிவை யுணர்ந்த வள்ளல், இளங்குமணனுக்குப் பயந்து காட்டிற்கு ஓடிவிட்டான், ஓடி ஒரு குகையில் உறையலானான்.

மன்னவன் மறைந்த வரலாற்றைக் கேட்ட அவனது நாட்டுக் குடிகள் பட்ட துயரம் கூற முடியாது.

குமண மன்னவன் காட்டிற் கேகிய செய்தியை யுணர்ந்த அம் மாநகர்வாழ் மக்கள்,

"மண்செய்த பாவ முன்செய்தனவா மாமலர்மேற்
பெண்செய்த பாவ மதனிற் பெரிதென்பார்

புண்செய்த நெஞ்சை விதியென்பார் பூதலத்தோர்
கண்செய்த பாவங் கடலிற் பெரிதென்பார் ”

—கம்பராமாயணம்

“ அந்தோ! தருமம், தவம், பிழைபொறுத்தல், அடக்கம், வாய்மை முதலிய நற்குண நற்செயல்களுக்கு உறைவிடமானவனன்றோ குமணன்?

‘ தாயொக்கு மன்பிற் றவமொக்கு நலம்பயப்பில்
சேயொக்கு முன்னின் றொருசொற் செல்கதி யுய்க்கு நீரால்
நோயொக்கு மென்னின் மருந்தொக்கு நுணுக்கு கேள்வி
ஆயப்புகுங் காலறி வொக்கு மெவர்க்கு மன்னன் ”

—கம்பராமாயணம்

இத்தகைய அரசனைப் பிரிந்து நாம் எவ்வாறு உய்வோம்? கொடுங்கோல் மன்னவனான இளங்குமணனிடமிருந்து நாம் எவ்வாறு கவலையின்றி வாழ்வோம்? கருணையே ஓர் உருவென வந்த குமணனைக் காட்டிற்கு ஏகச் செய்த இக் கொடும் பாவியிடமிருந்து சுகத்தை எப்படி எதிர் பார்ப்பது? குமணனை நீக்கி இளையவன் பட்டம் அடைதல் எங்ஙனம் ஏற்கும்?” என்று பலவாறு குமணனது புகழையும் இளங் குமணனது துரோகத்தையும் கூறிப் புலம்பினர் சிலர், காட்டிற்சென்று குமணனைக் கண்டு, அவனுக்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் தினந்தோறும் கொடுத்து வந்தனர். அதை யுணர்ந்த இளங் குமணன், “என் தமையனது தலையைக் கொண்டுவந்தோர் நற்பரிசில்

பெறுவர்" என்று பறைபறைவித்தான் எனினும் என்? குன்றாக் குன்றுப குமணனைக் கொல்ல யாரும் இசைவர்?

5 பெருந்தலைச் சாத்தனார்

சோழநாட்டைச் சேர்ந்த 'ஆலூர்' என்னும் கிராமத்தில் 'மூலங்கிழார்' என்னும் வேளாளர் ஒருவர் இருந்தார். அவர் 'நல்லிசைப் புலமை வாய்ந்த பெருந்தலைச் சாத்தனார்'க்குத் தந்தையாவர். சாதாரணமாக இருக்கவேண்டிய தலையை விட அவரது தலை சற்றுப் பெரிதாயிருந்தமையின் அவர் அப் பெயர் பெற்றார். சாத்தனார் தக்க வயதடைந்ததும் ஒரு குலமகளை நாடி மணந்து கொண்டார்; மகட்பேற்றையும் பெற்றார். பெருஞ் சித்திரனாரைப் போன்றே இவரும் வறுமைப் பிணியால் வாட்டமுற்றார்.

"வள்ளல்களை நாடிச் சென்று பரிசில் பெற்று வருவோம்" என எண்ணி, சாத்தனார் தம் ஊரைவிட்டு ஒரு காட்டுவழியே நடந்து சென்றார். செல்கையில் குமணனிடம் பரிசில் பெற்றுக் களிற்றின் மீதூர்ந்து வரும் பெருஞ் சித்திரனாரைக் கண்டார். சாத்தனாரைக் கண்ட புலவர் களிற்றினின்றும் இழிந்து தம் இரு கைகளாலும் சாத்தனாரைத் தழுவிக் கொண்டார். சாத்தனார், "புலவீர், களிறேது? எவ்வள்ளலை விட்டுச் சென்று மீள்கின்றீர்?" என்று சித்திரனாரை வினவினர். சித்திரனார் புலவரை அன்புடன் நோக்கி, "நாத

ஐயே! கொங்கு நாட்டில் முதிரமலைத் தலைவனும் வள்ளன்மையிற் சிறந்தவனுமான குமண மன்னவனைப் பாடிப் பரிசில் பெற்று மீள்கின்றேன். இக் களிறு அவன் ஈந்ததே. நீர் விரும்பி அப் பெருமானிடம் சென்று, உமது வறுமையைக் கூறுக, நும் மனமகிழு மாறு பரிசில் நல்குவன்" என்று கூறி விடைபெற்றுச் சென்றார்.

6 குமணனும் சாத்தனாரும்

பெருந்தலைச் சாத்தனார் முதிரமலை நாட்டை யடைந்தார், குமணன் காட்டில் வசிப்பதை உணர்ந்தார், இளங் குமணன் முன்னோன் தலையை விரும்பியதையும் கேள்விப்பட்டார், நேரே குமணன் இருக்கும் காட்டிற்கு ஓடினார், வள்ளலைக் கண்டனர். குமணன் புலவரை வரவேற்றான். புலவர் அரசனை நோக்கி,

"நல்ல போரைச் செய்கின்ற குமண! என்று இல்லத்தில் வறுமையின் கொடுமையால் சமைத்த லாகிய தொழிலைச் செய்தலை யொழித்ததால் குமிழ்களை யுடைய அடுப்பில் காளான் பூத்திருக்கின்றது. உண வின்மையின் பசியால் வருந்தி என் மனைவி மெலிந்த னள். அவளது தனயனோ பாலை உண்ணப் பெறாமல் தோலாத் துன்பமுடனே மடிந்து கிடக்கின்றனன். பசியால் வாடும் மைந்தன் பால் இன்றி வற்றிய அத் தனங்களைச் சுவைத்துப் பார்த்துப் பாலின்மையால்

தாய்முகம் பார்த்து விம்மினன் அவளோ விழியி னின்றும் நீரை முத்து முத்தாகச் சொரிந்து என்னை நோக்கினள், யானோ கொடையிற் சிறந்த நின்னை நினைந்து வந்தடைந்தேன் நீயோ, பாணர்களுக்கு நரம்புகளை யமைக்கப்பட்ட சிறந்த நல்ல யாழையும் மார்ச்சனை நிறைந்த மத்தளத்தினையும் உடைய கூத்தரது வறுமையைப் போக்கும் வள்ளல்களது குடியிற் பிறந்தவன் எனது வறிய நிலையை யறிந்தாயாகலின் நீ வறுமையுற்ற இந்நிலையிலும் உன்னிடமிருந்து பரிசில் பெற்றுத்தான் விடேன்” என்னும் பொருள்பட,

“ ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பில்
ஆம்பி பூப்பத் தேம்புபசி யுழவாப்
பாஅ லின்மையிற் றோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொறு அழூஉந்தன் மகத்துமுக நோக்கி
நீரொடு நிறைந்த வீரிதழ் மழைக்கண்ணென்
மனையோ ளெவ்வ நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண !
என்னிலை அறிந்தனை யாயி னிந்நிலைத்
தொடுத்துங் கொள்ளா தமையலெ னடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணார் முழவின் வயிரியர்
இன்மை தீர்க்குங் குடிப்பிறந் தோயே !”

என்று பைந்தமிழ்ப்பா வொன்றினைப் பாடினார்

தமிழின் அருமையும் புலவர் பெருமையும் அவர் பாடிய பாவினின்றும் பருகித் திகழ் படைவேற் குமணன், அகம் மலர் முகம் மலர்ந்தான், புலவரைத் தம்மிரு கரங்களாலும் சேர்த்து மார்போடு புல்லினன், வறுமை செய்யும் துன்பத்தினையும் புலவர் பாட்டின் இன்பத்தினையும் எண்ணினன், தீங்கனி பாடிய செய்யவப் புலவர்க்குத் தரத்தக்கது தன்னிடம் யாதுளது என்றெண்ணி ஏங்கினன். பின்னர் அவன் புலவரை அன்போடு நோக்கி, "புலவீர்! பாவியேன் வேண்டும் பொருளெல்லாம் நயக்கும் பக்குவத்தனில் வந்திலீர், காடுறைந்து கடுந்துயர் உழக்கும் காலத்தில் வந்து கவல்கின்றீர். என்னினும் என்? என்று அருமைத் தம்பியான் இளங்குமணன் என் தலையைக் கொய்து வருவோர்க்குப் பிரம பரிசில் வழங்குவதாகப் பறை யறைவித்துள்ளான். ஆதலின், நீர் எனது தலையை யறுத்து, அதனைத் தம்பியிடம் காட்டிப் பரிசில் பெற்றேகுவீர்!" என்று முகமலர்ச்சியுடன் கூறினன்.

குணக்குன்றாய குமணன் கூறிய கூற்றைக் கேட்ட புலவர் கோமானது மனம் கரைந்தது. கண்களில் நீர் ஆறாய்ப் பெருகிற்று, செய்வதின்னதென்று தோன்றாது மயங்கி நின்றார். அப்போது குமணன், "புலவரே! என் தயங்கவேண்டும்? என்றைக் கிறப்பினும் ஒருநாள் இறக்கவேண்டியதுதானே!

என்றோ மரிப்பினும் இன்றே மரிப்பது மேல். அதிலும் சமயம் கிடைக்கும்போது சாவது மேல். நான் உயிர் துறந்தால் என் கலை எங்கு உதவப்போகின்றது? நரிகளும் நாய்களும் கூளிகளுமே பிய்த்துத் தின்னும், அவை தின்பதற்கு முன் என் தலையால் உமது வறுமை தீரப் பரிசில் பெறுவீர். 'தமிழ்ப் புலவர் வறுமையைக் கொல்லத் தலை யீந்தான் குமணன்' என்ற நற்புகழ் என்றுமே பெறலாகாதோ? இம்மாய உடலைச் சுமந்திருப்பதால் பயன் என்ன? இந்த யாக்கையோ,

'வினையின் வந்தது, வினைக்குவிளை வாயது,
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது,
மூத்துவிளி வுடையது, தீப்பிணி யிருக்கை,
பற்றின் பற்றிடம், குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையா றழுங்கல்
தவலா வுள்ளந் தன்பா லுடையது'

—மணிமேகலை

இவற்றை யெல்லாம் நீர் அறியாதவர் அல்லர், 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்று வண்ணம் என் தலையால் பரிசில் கிடைக்கும் இக் காலத்தை நீர் விடுக்க வேண்டா, பகைவனாகிய தம்பியிடம் சென்றால் பரிசில் பெறமாட்டீர். இதோ என் வாளைத் தருகின்றேன், உமது வேலையை முடித்துக்

போகங்க ளனைத்தையும் துறந்து, சீராமன் நாட்டை மீண்டும் அடையும் வரையில் துறவி வேடத்துடன் இருந்தானல்லவோ? அத்தகைய சகோதர அன்பு வாய்ந்த அரச குலத்திலே பிறந்த நீ, சகோதர அன்பில்லா திருத்தல் மிகவும் வெறுக்கத் தக்கதா யுள்ளது" என்று முகவுரையாக இவை யனைத்தையுங் கூறிய பின்னும் அவனை நோக்கி, "நிலையற்ற இவ் வுலகில் நம் பெயர் நிலைபெற்றிருக்க வேண்டுமென் னினைந் தோர் தமது நற் செயல்களால் நற் புகழை நிலைநாட்டி மாய்ந்தனர். மிக்க செல்வத்தையுடைய மக்கள் இரப்போர்க்குக் கொடாமையால், புகழுடம்பு எய்தாது ஒழிந்தனர், அவர்கள் உலகத்தோடு ஒத்துப் போதலை அறியாதார். தாள்வளையும் தாழ்ந்துள்ளவையும் ஓசை கருவண்ணமுமான மணிகள் மாறி மாறி ஒலிக்க, அழகிய நெற்றியையும் அசைந்து செல்லும் இயல்பினையும் உடைய யானைகளை இரக்கும் புலவர்க்கு அதிகமாகக் கொடுக்கும் அழிவில்லாத நல்ல புகழைப் பெற்ற வலிய குதிரையை யுடைய தலைவனை (குமணனை)ப் பாடி நின்றேன். அத் தலைவன், 'பயன் இன்றியே பாடிய இப் புலவன் பரிசில் இன்றி வாட்டமுறுகின்றானே, வாட்ட முற்று இவன் திரும்பிச் செல்லல் நான் நாடிழந்து அனுபவிக்கும் துயரினும் அதிகமானதாகும்' என்று, தன் கூரிய அறிவால் எண்ணித் தன்னிற் சிறந்த பிறிதொன் றில்லை எனத் துணிந்து, தனது தலையை வெட்டத் தன கூரிய

வாளை என்னிடம் தந்தான். போரிற் புறங் கொடாத தன்மை யுடையானது அரிய செயலைக் கண்டு இவ் வாளுடனே பேருவகையோடு நின்னிடம் வந்தேன்" என்று கருக்கொண்ட கொண்டல் நீரைச் சொரிகிறாற் போன்று தீந்தமிழ்ப்பால சொற்களைப் பொழிந்தார்.

8 பிரிந்தோர் கூடல்

பெருந்தலைச் சாத்தனார் உரைத்தவை எல்லாம் கேட்ட இளங்குமணன் கலவுறவு பெற்றான், முன் னொன்று பாந்த சிந்தையையும் விரிக்க மோகத்தையும் எண்ணினான்; தமையனுடைய அருள்வழியும் கண் ணும், புன்சிரிப்புத் தவழும் பொலிவுபெற்ற முக முமு அவன் அகக்கண்ணே தோன்றின; தான் செய்த துரோக சிந்தனையை எண்ணி உடல் நடுங்கி னான்; விழிநீர் சிந்த 'ஓ'வென் றலறினான்; அவன் புல வரது தாள்களைப் பற்றிக்கொண்டு, "பெரியீர்! இன் னே என்து அண்ணலைக் காண விழைகின்றேன், வம் மின்" என்று அரற்றினான்.

புலவர் பெருமகிழ்ச்சி யடைந்து இளங்குமணனை அழைத்துச் சென்று குமணனிடம் விட்டார். பின் னோன் முன்னோனது கழலடிகளைப் பணிந்து போற்றி, தான் செய்த தவறுகளை மன்னிக்குமாறு வேண்டினன். குணக்குன்றாய குமணனும் தன் இள வலை மார்புறத் தழுவிக் களித்தான். பின்னர் மூவரும்